2017 மார்ச் 09
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 09 · பக்கங்கள் 12 · மணி 03 · ஒளி 040

NAVAMANI DAILY
නවමණී දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திர...

QD / 154 / NEWS / 2017



இரட்டை சதத்தை தவறவிட்ட குசல் மெண்டிஸ்
12



புதிய பிரதம நீதியரசரின் முன்னுள்ள எதிர்பார்ப்புகள்
04



மு.கா. எதிர் கூட்டணியின் சாத்தியப்பாடுகள்
09

# பாராளுமன்றில் சர்ச்சை;

# தினேஷுக்கு ஒரு வாரம் தடை



- சபையினுள் பொலிஸார் வரவழைப்பு
- மூன்று முறை சபை ஒத்திவைப்பு

■ அ. அருண் பிரசாந்த்

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியை பாராளுமன்றத்தில் சுதந்திரமாகச் செயற்பட இடமளிக்க முடியாதென சபாநாயகர் கருஜயசூரிய அளித்த தீர்ப்பை கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடராக ஆட்சேபித்ததனையடுத்து எழுந்த சர்ச்சை காரணமாக பாராளுமன்றம் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டதோடு, எதிர்க் கட்சியின் மூத்த உறுப்பினரான தினேஷ் குணவர்தன ஒரு வார காலத்திற்கு பாராளுமன்ற

11 »»»

## சர்ச்சை குறித்து பிரதமர் கவலை



■ அ. அருண் பிரசாந்த்

பாராளுமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர்களால் நேற்று நடத்தப்பட்ட பெரும் சர்ச்சைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது கவலையை வெளியிட்டார்.

அத்தோடு, விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியை சுயாதீனமாக இயங்குவதற்கு இடமளிக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியை சுயாதீனமாக செயற்பட இடமளிக்க முடியாது

11 »»»»»

## காத்தான்குடி பள்ளி படுகொலைகளை புலிகளின் புலனாய்வு பிரிவே செய்தது

### எனக்கு எந்த தொடர்பும் இல்லை

### கருணா அம்மான்



■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

புலிகளின் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த நியூட்டன் தலைமையிலான புலிகளே காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலையைப் புரிந்தனர் என்றும் தனக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும் முன்னாள் அமைச்சரும்

11 »»»»»




இலங்கைக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையிலான கடல்சார் மற்றும் மீன்பிடி ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையும், பாரம்பரிய தொழிற்றுறை சார்ந்த ஒத்துழைப்புக்களுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையும் அரச தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டதுடன், இலங்கை சார்பில் மீன்பிடி மற்றும் நீரியல் வள இராஜாங்க அமைச்சர் துலிப் வெதஆரச்சியும், இந்தோனேஷியா சார்பில் அந்நாட்டின் கடல்சார் அலுவல்கள் மற்றும் மீன்பிடி அமைச்சரும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

## ஐ.தே.க. ஆதரவாளர்கள் நல்லாட்சியில் புறக்கணிப்பு

- செயற்குழு கூட்டத்தில் முறைப்பாடு

நல்லாட்சி அரசில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்படுவதாக நேற்று நடைபெற்ற ஐ.தே.க. செயற்குழு கூட்டத்தில் ஐ.தே.க. அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் பலரும் முறையிட்டுள்ளனர்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சி செயற்குழு கூட்டத்தில் கட்சிக்காக உழைத்தவர்கள்



11 »»»»»

## தேசிய சுதந்திர முன்னணி சுயாதீனமாக செயற்பட முடியாது



■ அ. அருண் பிரசாந்த்

அரசமைப்பின் பிரகாரமும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அமைவாகவும் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய

11 »»»»»

## பஷிலுக்கு பிணை

முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்திதிட்டத்தின் கித்சிறி ரணவக்க ஆகியோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, உள்ளூர் அதிகாரிகளுக்கு

11 »»»»»



## கிழக்கில் 4703 அதிபர், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப திட்டம்

### 14 ஆம் திகதி திறைசேரியில் பேச்சு

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் வெற்றிடங்களுக்கு வேலையற்ற பட்டதாரிகளை நியமிப்பது தொடர்பான உத்தேச திட்டம் குறித்து ஆராய்வதற்கான உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய அவரது

11 »»»»»

## தகவல் அறியும் சட்டம் மக்கள் அதிக ஆர்வம்

### அதிகாரிகள் அசமந்தம்

### ஆணைக்குழு ஆணையாளர் புஞ்சி ஹேவா




■ ஆதில் அலி சப்ரி

தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்துவதில் பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்ற போதும், அரச அதிகாரிகளிடம் பழைய சிந்தனைத் தாக்கம் தொடர்ந்தும் இருப்பதாக தகவல் அறியும் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

தகவல் ஆணைக்குழுவின் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதா? என்று கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

11 »»»»»

# மட்டக்களப்பு ஆழ்கடல் மீனவர்களது பிரச்சினைக்கு அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியால் தீர்வு

அரசின் புதிய மீன்பிடி விதிமுறைகளால் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மீன்பிடி கடற்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன், அதற்குத் தீர்வினையும் பெற்றுக் கொடுத்தார்.

செவ்வாய்க்கிழமை பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் அமைச்சர் அமரவீரவை சந்தித்த இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், மட்டு மாவட்டத்தில் மட்டக்களப்பு, கல்லடி, பூநொச்சிமுனை மற்றும் காத்தான்குடி மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதுடன் அது சம்பந்தமான மகஜர் ஒன்றினையும் கையளித்தார்.

அரசின் புதிய மீன்பிடி விதிமுறைகளுக்கு அமைவாக, கடலில் பல நாள் தங்கும் ஆழ்கடல் மீன் பிடிப்பாளர்கள் மற்றும் மீன் பிடிப்படகுகள் துறைமுகங்களில் இருந்தே மீன்பிடிக்கச் செல்ல வேண்டும் என்ற சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இதனால், மட்டக்களப்பு



மாவட்டத்தில் உள்ள மட்டக்களப்பு, கல்லடி, பூநொச்சிமுனை மற்றும் காத்தான்குடி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மீன்பிடித் துறைமுகம் இல்லாத காரணத்தினால் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்துக்கு அல்லது ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்துக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது அவர்களுக்கு பல சிரமங்களையும் - அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக பூநொச்சிமுனை ஆழ்கடல் மீன்பிடி சங்கம் மற்றும் பூநொச்சிமுனை கிராமிய கடற்தொழில் அமைப்பு என்பன மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் கவனத்துக்கு கொண்டு வந்தன.

இந்த விடயம் தொடர்பில் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் மீன்பிடி கடற்தொழில் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடிய இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வினை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கையின் பலனாக, குறித்த மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பூநொச்சிமுனை கடற்கரையில் ஆழ்கடல் மீனவர்களை பதிவு செய்யும் மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் புதிய கிளைக் காரியாலயம் ஒன்றை அமைத்துத் தருவதாக அமைச்சர் அமரவீர உறுதியளித்ததுடன், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மீன்பிடி கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளரோடு கலந்துரையாடி மேற்கொள்வதாக தெரிவித்தார்.

## கிண்ணியாவில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்



கிண்ணியாவில் தற்போது தீவிரமடைந்துள்ள டெங்கு நோயை கட்டுபடுத்தும் நோக்கில் டெங்கு நோயை காவுகின்ற நுளம்புகளையும் அதன் குடம்பிகளின் பெருக்கத்தையும் தடுப்பதற்காக திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தலைமையில் அண்மையில் சிரமதானம் நடைபெற்றது.

இச்சிரமதானத்தில் கிண்ணியா மட்டுமல்லாது தோப்பூர், தம்பலகாமம் மற்றும் மூதூர் என பல பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்டு சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

(படங்கள் -கிண்ணியா நிருபர் )

## இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் தீனியாத் சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(இறக்காமம் நிருபர்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் இஸ்லாமிய தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் சகல அஹதிய்யாப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பாடசாலைகளில் 13ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களும், அரபுக்கல்லூரி மாணவர்களும் மற்றும் அஹதிய்யாப் பாடசாலை ஆசிரியர்களும் தோற்றவுள்ள மேற்படி பரீட்சை அகீதா, பிக்ஹு, அஸ்ஸீரா, அக்லாக், அரபு மொழி ஆகிய ஐந்து பாடங்களைக் கொண்டதாகும்.

விண்ணப்பப் படிவங்கள் இரு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு மூலப் பிரதி, பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2017 ஏப்ரல்மாதம் 03ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். இரண்டாம் பிரதியை தம்மிடம் வைத்துக் கொள்ளுமாறு அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## மருதமுனை தாவூத் லெவ்வை அப்துல் மனாப் மேல் நீதிமன்ற நீதிபதியாக இன்று சத்தியப்பிரமாணம்

(மருதமுனை நிருபர்)

மருதமுனையைச்சேர்ந்த தாவூத் லெப்வை அப்துல் மனாப் மேல் நீதிமன்ற நீதிபதியாக இன்று வியாழக்கிழமை மீயுயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்கின்றார். இவர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய நிலையிலேயே பதவி உயர்வுடன் இந்த நியமனம் வழங்கப்பட்டள்ளது.

இவர் 1963ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி மருதமுனையைச் சேர்ந்த தாவூத் லெவ்வை கதீஜா உம்மா தம்பதிக்கு மகனாக மருதமுனையில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் கற்றார். உயர்கல்வியை மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையிலும், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் கற்றார்.

1983ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சட்ட பீட மாணவனாகத் தெரிவாகி 1991ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். மீண்டும் கொழும்பு பல்கலைக்கழத்தில் கற்று சட்ட முதுமாணியைப் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சை மூலம் நீதவானாக நியமனம் பெற்று மருதமுனையின் முதல் நீதவான் என்ற பெருமையையும் பெற்றார்.

அந்த நீதவான் நியமனத்துடன் கொழும்பு, திருகோணமலை, மூதூர், அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய நீதிமன்றங்களில் கடமையாற்றி மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு பெற்று அக்கரைப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நீதிமன்றங்களில் கடமையாற்றி இறுதியாக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய நிலையிலேயே இந்த மேல் நீதிமன்ற நீதிபதிக்கான நியமனம் வழங்கப் பட்டுள்ளது.இந்த நியமனத்தைப் பெற்ற மருதமுனையின் முதல் மகன் இவராவார்.



இவர் நீதித்துறையில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதுடன் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்டுள்ள இவர் பல அமைப்புக்கள் மூலம் வறிய மாணவர்களுக்கும்.வறிய குடும்பங்களுக்கும் பல்வேறுபட்ட உதவிகளைச் செய்து வருகின்றார்.

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணிப்பகிஷ்கரிப்பு







(எம்.ஏ.றமீஸ்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்கள் இரண்டு அம்சக் கோரிக்கையினை முன்வைத்து இரண்டு நாள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் ஆரம்பமான இப்பணிப்பகிஷ்கரிப்பு இன்று(09) வரை தொடரும் என பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட விரிவுரையாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஆலோசனைக் கமைவாக நடைபெற்ற இப்பணிப் பகிஷ்கரிப்பின்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு சம்பள உயர்வானது 2015 டிசம்பர் மாத அடிப்படைச் சம்பளத்தின் அடிப் படையிலேயே வழங்கப்படுகின்றது. இதனால் வருடாந்த சம்பள அதிகரிப்பு நிலுவை என்பன வழங்கப்படாமல் உள்ளதென்றும் இதனை தீர்க்குமாறும், தேசிய வருமானத்தில் ஆறு சதவீதத் தினை கல்விக்கு ஒதுக்கிடு செய்து அரச பல்கலைக்கழகங்களைப் பாதுகாப்போம் என்னும் இரண்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இப்பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

விரிவுரையாளர்களின் இப்பணிப்பகிஷ்கரிப்பின் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பேற்பட்டது.

## பெரியமடு கிழக்கில் கிராம சேவையாளர் இன்றி பொதுமக்கள் அவதி

(பாலாவி நிருபர் முனாப்)

மாந்தை பிரதேச செயலக பிரிவைக் கொண்ட பெரியமடு கிழக்கில் கிராம சேவகர் இன்றி பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

பெரியமடு கிழக்கில் நீண்ட காலமாக கிராம சேவகராக கடமையாற்றி வந்த கே.எம். அஜ்மல் கற்பிட்டி பிரதேச செயலக பிரிவைக் கொண்ட ஆலங்குடா பிரதேசத்திற்கு இடமாற்றம் கிடைத்து சென்று விட்ட நிலையில்,

அவரது இடத்திற்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை. இதனால் அப்பிரதேச மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே, மாந்தை பிரதேச செயலாளர் கிராமசேவையாளர் ஒருவரை நியமிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கிழக்கின் சுகாதார அபிவிருத்தி குறித்து மாகாண அமைச்சில் கலந்துரையாடல்



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள பிராந்திய சுகாதார பணிமனையின் கீழ் உள்ள 04 பிராந்தியங்களுக்கும் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் 2016ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ள அபிவிருத்திகள் தொடர்பாகவும் 2017ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தலைமையில் நேற்று முன்தினம் மாலை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திருகோணமலை காரியாலயத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அங்கு இக்குழுவினால் 2017ஆம் ஆண்டு கிழக்கு மாகாண அமைச்சின் கீழ் இயங்கும் 04 பிராந்தியாங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கையாள்கை தொடர்பாகவும் நிர்மாண வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் வைத்தியசாலைகளின் பிரச்சினைகள் தொடர்பாகவும் நிர்மாண வேலைகளில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாகவும் வைத்தியசாலைக்கு தேவையான இயந்திரங்கள் தொடர்பாகவும் ஆளணிப்பிரச்சினைகள் தொடர்பாகவும் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ள வாகனங்கள் தொடர்பாகவும் சில முக்கிய வைத்தியசாலைகளை தரமுயர்த்துவது தொடர்பாகவும் வைத்தியசாலைகளின் பாதுகாப்பு விஸ்தரிப்பது தொடர்பாகவும் முழுமையாக ஆராயப்பட்டது.

மேலும், ஆலம்குளம், ஒலுவில், மூதூர், கிண்ணியா, அட்டாளைச்சேனை, பாலமுனை, தம்பலகாமம், புல்மோட்டை, கோமரங்கடாவ, வானெல, ஈச்சலம்பற்று, சம்பூர், வாழைச்சேனை, ஆரயம்பதி, ஓட்டமாவடி, கிரான், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், சந்திவெளி, பண்சய, கூலாவடி, வாகரை, உன்னிச்சை, சாய்ந்தமருது, இஸ்லாமாபாத், திருக்கோவில், சென்னல் கிராம, சென்றல் கேம்ப், ஒலுவில், சம்மாந்துறை உள்ளிட்ட பல வைத்தியசாலைகள் அடையாளம் காணப்பட்டு ஒதுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஒதுக்கப்படவுள்ள நிதிகள் தொடர்பாகவும் அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

இக்கலந்துரையாடலுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், உதவிச்செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம கணக்காளர், சுகாதார அமைச்சின் பொறியியலாளர், மேலதிக மாகாணப்பணிப்பாளர், சமூக வைத்திய நிபுணர், திட்டமிடல் வைத்திய அதிகாரி, கல்முனை-திருகோணமலை-மட்டக்களப்பு சுகாதார பணிப்பாளர்கள், பிராந்திய அலுவல பணிப்பாளர்கள், சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் அங்கு11 வைத்தியசாலைகளுக்கு மத்தியரசினால் ஒவ்வொரு வைத்தியசாலைகளுக்கும் ஒதுக்கப்பட்ட 10மில்லியன்கள் தொடர்பாகவும் பேசப்பட்டதுடன் இன்னும் பல வைத்தியசாலைகள் தொடர்பாக பிராந்திய பணிப்பாளர்கள் ஊடாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீரினால் பேசப்பட்டது.

## தாய்லாந்தில் தங்கப் பதக்கம் வென்ற சியாட் வரவேற்கப்பட்டார்



அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற சர்வேதேச மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர் போட்டியில் கலந்துகொண்டு ஈட்டி எறிதலில் தங்க பதக்கமும் குண்டு போடுதலில் வெள்ளி பதக்கமும் பெற்ற நிந்தவூரை சேர்ந்த யூ.எல். சியாட் முஹம்மட்டினை சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம் நேற்று முன் தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார். இதில் பிரதி அமைச்சர் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட வீரர்களை படங்களில் காணலாம். (படங்கள் : சுலைமான் றாபி)

## இலங்கை கல்வி நிருவாக சேவையில் பொத்துவில் நபீஸ் முஹம்மட் தெரிவு

(எம்.எஸ்.சம்சுல் ஹுதா,பொத்துவில்)



அண்மையில் நடாத்தப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சையில் பொத்துவிலைச் சேர்ந்த முஹம்மட் சம்சுதீன் நபீஸ் முஹமமட் தெரிவு.

திறந்தபோட்டிப் பரீட்சை ஒன்றில் பொத்துவிலைச் சேர்ந்த ஒருவர் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும், இத் திறந்தபோட்டிப் பரீட்சையில் 37 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனம் இம்மாதம் 15ம் திகதி கல்விஅமைச்சில் வழங்கி வைக்கப்படவுள்ளது.

# சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் எண்மர் இடமாற்றம்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 8 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இருவர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஐவர் ஆகியோருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்தது. பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமையவே, பொலிஸ் திணைக்களத்தினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் மேலும் சுட்டிக்காட்டியது. இதற்கமையப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எல்.எச்.ஜீ குரே, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளான சமன்யட்டவர, ஜீ. எம்.எச்.புத்திக சிறிவர்தன, மற்றும் பொலிஸ் அதிகாரிகளான எல்.கே.டீ.அனில் பிரியந்த, ஏ.பீ. ஹெக்மன, எம்.என்.எஸ்.மென்டிஸ், ஏ.ஜீ.யூ.சீ.ஹேரத், மற்றும் டப்ளியூ.எம்.ஏ. ரொஹான் பெர்னாண்டோ உள்ளிட்டவர்களுக்கே, இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டது.

# இந்திய மீனவர் சுட்டுக்கொலை விசாரணை அறிக்கை விரைவில்

## இலங்கை கடற்படை அறிவிப்பு



இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கவுள்ளதாக, கடற்படை தெரிவித்தது.

குறித்த அறிக்கை கடற்படைத் தளபதியிடம் கையளிக்கப்படும் என்றும் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அண்மையில், கச்சத்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்ததோடு, மேலும் சில மீனவர்கள் காயமடைந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு இருந்தன.

எதுஎவ்வாறு இருப்பினும், கடற்படை குறித்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

மேலும் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலும், இந்த சம்பவத்திற்கும் இலங்கை கடற்படைக்கும் தொடர்பில்லை என, ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக, குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் கவலை தெரிவித்த இலங்கை வெளிவிவகார அமைச்சு, இந்திய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இது குறித்த விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியிருந்தது.

இதேவேளை, இலங்கை கடற்படையினர் மீது மண்டபம் கடலோர காவல்படை நிலையத் தில் 302 மற்றும் 307 ஆகிய இரண்டு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என ஏடிஜிபி சைலேந்திர பாபு தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினர் மீது இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பொலிஸ்நிலையங்களில் மீனவர்களை காயப்படுத்துதல், தாக்குதல், வலைகளை திருடுதல், உடமைகளை சேதப்படுத்துதல் ஆகியவற்றின் பொலிஸார் வழக்குகளைப் பதிவு செய்து வந்தனர். கடந்த 25 ஆண்டுகள் கழித்து இலங்கை கடற்படையினர் மீது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 302ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். பிரிட்ஜோ, ஜெரோன், அந்தோனி, கிளிண்டஸ், சாம் பிரிட்ஜோ, ரிமோட்சன் ஆகிய 6 மீனவர்கள் இரவு 10.00 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது மீனவர்களின் படகை நோக்கிச் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பிரிட்ஜோ (21) என்ற மீனவர் குண்டடிபட்டு உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்தியாவில் கைது

நாகப்பட்டினம் அருகே இந்திய கடல் எல்லைப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 10 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, இவர்களின் 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம் அருகே கோடியக்கரையிலிருந்து 50 நாட்டிக்கல் கடல் மைல் தொலைவில் இரண்டு படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இலங்கையை சேர்ந்த 10 மீனவர்களை, இந்திய கடலோர பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்திய எல்லையில் அத்துமீறி மீன் பிடித்ததாகக் கூறி அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், அவர்களின் 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள 10 பேரும் காரைக்கால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச் சூட்டில் இராமேஸ்வரம் மீனவர் பிரிட்ஜோ பலியானார். இதனால் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்காரணமாக, இரு நாட்டு கடற்பகுதியில் பதற்றம் நிலவி வருகிறமையும் குறிப்பிடத்தக்கது.

# 193 மில்லியன் பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்பு

தளபாடங்களில் மறைத்து வைத்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 193 மில்லியன் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் ஒருதொகை ஊருகொடவத்தை பகுதியில் வைத்து சுங்க பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த 35 இலட்ச சிகரெட்டுக்கள் இந்தோனேஷியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அந்த வகையில், 25 மேசைகள், 100 கதிரைகள் 20 அடிகள் கொண்ட கொல்களனிலேயே குறித்த சிகரெட்டுக்கள் மறைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், குறித்த சிகரெட் அடங்கிய கொல்கலன் தற்காலிகமாக இலங்கையில் தரித்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சுங்கப் பிரிவினர் அதனை கைப்பற்றியுள்ளனர்.

# வடமாகாணத்திலும் இன்புளுவன்ஸா அபாயம்

வட மாகாணத்திலும் எச்1என்1 இன்புளுவன்ஸா நோய் வந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் 400 நோயாளர்கள் வரை இதுவரையில் இனங்காணப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அந்தவகையில், அதிகளவில் நோயாளர்கள் இனங்காணப்பட்ட மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் உள்ளதோடு, கிளிநொச்சி வைத்தியசாலையில் 244 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 80 பேர் கர்ப்பிணி நோயாளர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நோயாளர்களில் இரத்தத்தை பரிசோதனை செய்வதற்காக கொழும்பிற்கு அனுப்பிவைத்த வேளையில், 65 பேரளவில் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. வடக்கு மாகாணத்தில் எந்தவொரு வைத்தியசாலைக்கும் குறித்த வைரஸ் தொடர்பில் பரிசோதனை செய்ய வசதிகள் இல்லையென்றும், குறித்த நோய் பரவும் அபாயம் இருப்பதாக தெரிவித்து ஒருநாளைக்கு 1200 நோயாளர்கள் வரை சிகிச்சை பெற வருவதாவும் வடமாகாண சுகாதார பிரிவு தெரிவித்தது.

# ஸ்ரீ.ல.சு.மகளிர் முன்னணியின் மகளிர் தின வைபவம் இன்று

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திர மகளிர் முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் இன்று காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளது.

'அவளின் பலம் கட்சிக்கும் நாட்டிற் கும்' என்ற தொனிப்பொருளில் இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கிய ஒரு கட்சியாகும். உலகின் முதலாவது பிரதமரும் நாட்டின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து உருவானதாகவும் சுதந்திரக்கட்சி தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.



## ஜனாதிபதிக்கு மைத்திரிக்கு

# இந்தோனேசியாவில் கோலாகல வரவேற்பு

40 வருடங்களின் பின்னர் இலங்கையின் அரச தலைவர் ஒருவருக்கு இந்தோனேசியாவில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்வதற்கு கிடைத்த முதலாவது உத்தியோகபூர்வ அழைப்பினை நினைவுகூரும் வகையில் நேற்று முற்பகல் இந்தோனேசிய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான மர்டேகா மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோ மிகவும் சிநேகபூர்வமான முறையில் வரவேற்றார்.

இலங்கையின் ஜனாதிபதியை வரவேற்பதற்கு கோலாகலமான வரவேற்பு வைபவம் மர்டேகா மாளிகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன், 21 மரியாதை வேட்டுக்களுடன் கூடிய இராணுவ அணிவகுப்பு மரியாதை அளித்து மிக கௌரவமான முறையில் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

இரு அரச தலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடலின் பின்னர் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. இதன் பின்னர் இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான இரு புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் அரச தலைவர்களின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான கடல்சார் மற்றும் மீன்படி ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையும், பாரம்பரிய தொழிற்துறை சார்ந்த ஒத்துழைப்புக்களுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையும் இதன்போது கைச்சாத்திடப்பட்டதுடன், இலங்கை சார்பில் மீன்பிடி மற்றும் நீரியல் வள இராஜாங்க அமைச்சர் துலிப் வெதஆரச்சியும், இந்தோனேசியா சார்பில் அந்நாட்டின் கடல்சார் அலுவல்கள் மற்றும் மீன்படி அமைச்சரும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இரு அரச தலைவர்களும் இணைந்த ஊடக சந்திப்பு ஒன்றிலும் கலந்து கொண்டனர். அதன் பின்னர் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோவால் வழங்கப்பட்ட விசேட விருந்துபசாரத்தில் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் கலந்துகொண்டனர்.

இலங்கையின் அபவிருத்தி செயல் திட்டங்களுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் பெற்றுத்தருவதாக இதன்போது இந்தோனேசிய ஜனாதிபதி குறிப்பிட்டார். ஜனநாயக நாடுகளின் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக கொண்டுவரப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாக இணைந்து செயற்படுவது பற்றியும் அரச தலைவர்கள் கலந்துரையாடினர்.

இந்தோனேசியாவின் தனியார் மற்றும் அரச முதலீட்டாளர்களுக்கும் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க முடியும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அதற்குரிய வரிச்சலுகைகள் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அரசு தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொள்ளுமாறு இந்தோனேசிய ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி எதிர்வரும் மே மாதத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வெசாக் தின வைபவங்களில் கலந்துகொள்வதற்காக அந்நாட்டு அரச பிரதிநிதி ஒருவரை பங்குபற்ற செய்யுமாறும் தெரிவித்தார்.

## நடமாடும் சேவை

வெளிநாடுகளில் பணிபுரிவோரின் குடும்பத்தினருக்கான விசேட நடமாடும் சேவை திருகோணமலை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் இன்றையதினம் ஆரம்பமாகவுள்ளது. வெளிநாடுகளில் தொழில்புரியும் தொழிலாளர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவையின் இரண்டாம் கட்டம் இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை திருகோணமலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெறவுள்ளது. இவர்களின் கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்கள் பற்றி இதன் போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. இந்த நடவடிக்கையில் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு அதிகளவிலான பொறுப்புக்கள் காணப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்தது.

## ஏறாவூர் இரட்டைப் படுகொலை;

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(ஏறாவூர் நிருபர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஏறாவூரில் தாய் மற்றும் மகள் இரட்டைப் படுகொலைச் சந்தேக நபர்கள் அறுவருக்கும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக மாவட்ட நீதிபதி முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஷ்வி உத்தரவிட்டார்.

ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்துவந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது 56) அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (வயது 32) ஆகியோர் செப்டம்பர் 11 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தனர். சந்தேகநபர்களான இஸ்மாயில் முஹம்மது பாஹிர் (24 கொல்லப்பட்ட பெண்ணின் கணவனுடைய சகோதரன்), உஸனார் முஹம்மது தில்ஷான் (29), கலீலுர் ரஹ்மான் அஹம்மது றாசிம் (23), புஹாரி முஹம்மது அஸ்ஹர் (23), இஸ்மாயில் சப்ரின் (30), அபூபக்கர் முஹம்மது பிலால் (50) ஆகிய அறுவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆலையடி வேம்பில் மினி ஆடைத்தொழிற்சாலை

## அமைச்சர் றிஷாத் நடவடிக்கை



அம்பாறை ஆலையடி வேம்பு பிரதேசத்தில் ஒரு மினி ஆடைத் தொழிற்சாலை அமைப்பதற்கும் அந்த பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வாதார முயற்சிகளை மேம்படுத்துவதற்குமென சுமார் 50 பேருக்கு சுயதொழில் வாய்ப்புக்களுக்கான உதவிகளை நல்குவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஆலையடி வேம்பு பிரதேசத்தில் படித்துவிட்டு தொழில்வாய்ப்பின்றி வீடுகளில் முடங்கிக்கிடக்கும் இளைஞர் யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக எதிர்வரும் காலங்களில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக அவர் உறுதியளித்தார்.

ஆலையடி வேம்புப் பிரதேசத்திலுள்ள பெண்களும், யுவதிகளும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆலையடி வேம்பு மத்திய குழுத் தலைவர் தாமோதரம் ஜெயாகர் தலைமையில் அமைச்சர் றிஷாத் பதியுதீனை மட்டக்களப்பு நாவற்குடாவில் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இது தொடர்பில் அம்மக்கள் தெரிவிக்கையில்,

அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் நாங்கள் இணைந்துள்ளோம். இந்தக் கட்சியை முஸ்லிம் கட்சியென்றே நாங்கள் முன்னர் எண்ணியிருந்தோம்.

ஆனால் அக்கட்சித்தலைவரின் செயற்பாடுகள் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் வியாபித்து நிற்கின்றன. எவருடைய தூண்டலின் பெயரிலோ, எவருடைய வேண்டுதலின் பெயரிலோ, நிர்ப்பந்தத்தின் காரணமாகவோ நாம் இந்தக் கட்சியில் இணையவில்லை எனவும் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் மக்கள் காங்கிரஸின் செயலாளர் சுபைர்தீன், பிரதியமைச்சர் அமீர் அலி, அப்துல்லாஹ் மஹ்ரூப் எம் பி , கட்சியின் முக்கியஸ்தர்களான எஸ்.எஸ்.பி. மஜீத், என்.எம். நபீல், உட்பட பலர் பங்கேற்றிருந்தனர்.



புத்தளம் மாவட்டம், கொத்தாந்தீவு, கருவமடு, கணமூலை, புலுதிவாயல் மற்றும் கடயமோட்டை உள்ளிட்ட இன்னும் சில பிரதேசங்களில் குடி நீர் வழங்குவதில் காணப்படும் பிரச்சினைகளை நேரில் சென்று ஆராய்வதற்காக, அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பணிப்புரைக்கமைய, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதித் தலைவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான ஷபீக் ரஜாப்தீன் உள்ளிட்ட குழுவினர் புத்தளம் மாவட்டத்துக்கு அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் புத்தளம்-அக்கரைப்பற்று ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இச்சந்திப்பில் வடமேல் மாகாணசபை உறுப்பினர் எச்.எம்.எம். நியாஸ், புத்தளம் மாவட்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
09TH MARCH 2017 - THURSDAY

# போதைப் பொருட்களை ஒழிக்க இலங்கை நடவடிக்கை எடுக்குமா?

கடல் மார்க்கமாக சட்டவிரோத போதைப்பொருட்கள் கடத்துவதை தடுப்பதற்கு, இந்து சமுத்திர வலய அமைப்பு விரிவான திட்டமொன்றை உருவாக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தோனேஷியாவில் நடைபெற்ற, மேற்படி நிறுவனத்தின் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷிய தலைநகர் ஜாகர்தாவில், இந்து சமுத்திர வலய அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தோனேஷியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் முழுவதும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி வருகின்ற நிலையில், இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகள் போதைப் பொருள் சந்தைகளாகவும், போதைப் பொருட்கள் நாட்டுக்கு நாடு கைமாறும் இடங்களாகவும், போதைப் பொருள் கடத்தல்காரர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நாட்டுக்கும் அந்தந்த நாட்டுக்குரிய கடல் எல்லைகள் இருக்கின்றன. இந்த எல்லைகளுக்குள் அந்தந்த நாடுகளுக்கான அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், இந்த எல்லைகளைத் தாண்டியுள்ள சர்வதேச கடல் பரப்பில் நடைபெறும் கடத்தல்களை தடுப்பதற்கான பொறிமுறையொன்று வகுக்கப்பட வேண்டியுள்ளது.

இந்தப் பொறிமுறையை இந்து சமுத்திர வலய அமைப்பு உருவாக்க வேண்டும் என்றே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார். தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து இதனைச் செய்ய முடியும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இன்று மொத்த உலகமுமே போதைப் பொருட்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் பரவலாக்கத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியான கடல் மார்க்கமான கடத்தலை தடுப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேசியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும்.

இலங்கையிலும் போதைப் பொருட்களின் பரவல் பெருமளவு நடைபெற்று வருகின்றது. நாளாந்தம் வகை வகையான போதைப் பொருட் பாவனைக்கு சிறுவர்கள் முதல் முதியோர் வரை அடிமையாகி வருகின்றனர். சுங்கத்தில் கைது செய்யப்படும் போதைப் பொருட்களின் அளவும் பாரியதாக உள்ளது.

இலங்கைக்கு என்று பிரத்தியேகமாக கடத்தி வரும் போதைப் பொருட்கள் ஒருபுறமிருக்க, நாட்டுக்கு நாடு கைமாற்றப்படும்போது, இங்கே கசிய விடப்படுகின்ற போதைப் பொருட்களும் நாட்டில் பரவியுள்ளது. எனவே, இலங்கையிலிருந்து போதைப் பொருட்களை துடைத்தெறிவதற்கான பொறிமுறையும் வகுக்கப்பட வேண்டியுள்ளது.

போதைப் பொருட்களை நாட்டிலிருந்து துடைத்தெறிவதற்கான பொறிமுறையின் அவசியமும் பெருமளவு உணரப்படுகின்றது. இதற்கான பொறிமுறை பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது. போதைப் பொருளின் மீதான வெறுப்பை சிறுபராயம் முதல் விதைக்க வேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி, போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளவர்களை மீளவும் புனரமைப்பதற்கான திட்டங்களும் பரவலாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. இதனை அரச உதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மக்களை வழிப்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது, போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோரை சுற்றி வளைக்கும் நடவடிக்கைகளும் பெருமளவு மேற்கொள்ளப்பட வேண்டும். போதைப் பொருள் வியாபாரத்தில் சில்லறையாக ஈடுபடுவோரை கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுப்பது போன்றே, போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் பெரு முதலாளிகளையும் சட்டத்தின் முன்நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆக மொத்தத்தில், போதைப் பொருள் ஒழிப்பு என்பது, விழிப்புணர்வூட்டல், சட்டநடவடிக்கை எடுத்தல், சர்வதேச பொறிமுறையை உருவாக்கல் என்பது பல்கட்ட நடவடிக்கைகளூடான ஒரு பெரும் திட்டமாகும். இது குறித்து அரசு தீவிரமாக சிந்தித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# புதிய பிரதம நீதியரசரின் முன்னுள்ள எதிர்பார்ப்புகள்

■ கே.டபிள்யூ. ஜனரஞ்சன

பிரதம நீதியரசராக இருந்த கே. ஸ்ரீபவன் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி ஓய்வுபெற்றார். புதிய பிரதம நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் பியசாத் டெப் பதவியேற்றார். சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றும்போது உயர்நீதிமன்ற நீதியரசர்களுள் ஒருவராக அவர் நியமிக்கப்பட்டார். அரசியல் அமைப்புச் சபைக்கு ஜனாதிபதி சமர்ப்பிக்கும் பிரேரணை அச்சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட பின் பிரதம நீதியரசர் நியமிக்கப்படுவார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்புச் சபைக்கு



இரு பெயர்களை சிபாரிசு செய்திருந்தார். அந்த பெயரில் மற்றையது உயர்நீதிமன்ற நீதியரசர் கே.டி.சித்ரசிறி ஆவார். அவர்களில் டெப் நீதியரசரின் பெயரை அரசமைப்புச் சபை ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்திருப்பது இருவரிடையே அவரே சேவையில் மூப்புள்ளவர் என்பதனாலேயே.

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் அமைதியான நல்ல ஒருவராக நீதித் துறையில் பெயர் பெற்றிருந்தார். அவர் 43ஆவது பிரதம நீதியரசராக இருந்த கலாநிதி சிராணி பண்டாரநாயக்க இராஜினாமா செய்த பின் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே நியமிக்கப்பட்டார். காட்டு நீதிமன்றத்தால் காட்டுச் சட்டத்தின் கீழ் பதவியிலிருந்து நீக்கப்பட்ட கலாநிதி சிராணி பண்டாரநாயக்கவின் பின் பிரதம நீதியரசராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது கார்ல்டன் இல்லத்தில் பெருநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும் மட்டத்தில் உள்ள தனது நண்பரான மொஹான் பீரிஸே ஆகும்.

ஜனவரி 8ஆம் திகதி புதிய அரசு பதவியேற்றதும் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து மொஹான் பீரிஸ் நீக்கப்பட்டார். உண்மையிலேயே மொஹான் பீரிஸின் பிரதம நீதியரசர் பதவிக்கு எவ்வித அடிப்படையும் இருக்கவில்லை. அவர் இலங்கையின் 44ஆவது பிரதம நீதியரசரும் அல்ல. சிராணி பண்டாரநாயக்க அவர்கள் புதிய அரசு பதவியேற்ற பின் மீண்டும் பிரதம நீதியரசராக தன் பணிகளை ஆரம்பித்து ஒரு நாளில் இராஜினாமா செய்ததன் காரணமாக அடுத்து 44ஆவது பிரதம நீதியரசராக கே.ஸ்ரீபவன் நியமிக்கப்பட்டார்.

ஸ்ரீபவனின் பதவிக் காலத்தில் நீதித்துறையில் நல்லதும் நடக்காத, கெட்டதும் நடக்காத ஒரு நிலையே இருந்தது. அவர் நீதித்துறையில் பெரும் குழப்ப நிலைமைக்குப் பின்பே பதவியேற்றார். அந்த குழப்ப காலகட்டத்தில் நாட்டின் முழு நீதித்துறையும் சிக்கலுக்குள் தள்ளப்பட்டிருந்தது. இந்நிலைமை நீதித்துறையை அரசியல் மயமாக்கி அதனை விழுங்கிக் கொண்டிருந்தது. ஆளும் கட்சி அரசியல்வாதிகளுக்கு



அல்லது மற்ற பலமுள்ளோருக்கு நெருங்கியவர்கள் நீதவான்களாக நியமனம் பெறக்கூடிய நிலை இருந்தது. அதற்கு மேலதிகமாக கண்ணுக்கு, காதுக்கு தென்படும் பெண் சட்டத்தரணிகளுக்கு நீதவான்களாக வரும் பாக்கியமும் இருந்தது. பள்ளிக்கு, தேரர்களுக்கு, மற்றும் அரசியல்வாதிகளுக்கு நீதவான்களை இடமாற்றுவதற்கும், இடமாற்றத்தை நிறுத்துவதற்கான தன்மையும் இருந்தது. மஹிந்த ராஜபக்ஷ அவர்களது தேவைக்கேற்ப நீதித்துறை தானாக ஆட்டப்படும் நிலை இருந்தது. அந்த கட்டளைக்கு அடிபணியும் நீதியரசர்களது அலரி மாளிகை அணியினரது திட்டமிட்ட நீதிச் சேவை ஆணைக்குழு கொழும்பு உட்பட பிரதான நகரங்களில் மற்றும் நீதித்துறையின் மர்மஸ்தானங்களாக இருக்கும் நீதிமன்றங்களை தம்வசம் கொண்டிருந்தார்கள். நீதியரசர்களுக்கு அலரி மாளிகையில் இருந்து ஹம்பர்ஸ் (ஆணை) கிடைக்கும் நிலைமை இருந்ததாக அண்மையில் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தார். அலரி மாளிகை அணிக்கு உள்ளடங்காத சுதந்திரமான நீதியரசர்களுக்கு தூரப் பிரதேசங்கள் குறைந்த வசதிகளுடைய பிரதேசங்களின் நீதிமன்றங்களே கிடைத்தன. இந்த சிக்கலான சூழலுக்கு மத்தியிலே நீதித்துறையின் தலைமை ஆசனத்திற்கு ஸ்ரீபவன் நியமிக்கப்பட்டார்.

அவ்வாறான கிளர்ச்சி நிலைக்கு மத்தியில் கடலில் இருந்துகூட கப்பலொன்றை நெறிப்படுத்தும் பொறுப்பு இலகுவானதல்ல. சாதாரண நிலையை தாண்டிய சக்தியும் அர்ப்பணத்தையும் காண்பிப்பதற்கு அவ்வாறான கப்பலை ஓட்டும் மாலுமிக்கு ஏற்படுகிறது. எனினும் துரதிஷ்டவசமாக ஸ்ரீபவனுக்கு அவ்வாறான ஒரு சக்தி இருக்கவில்லை. எனவே ஒரு பக்கத்தில் இருக்கின்ற நிலைமைகளை அவ்வாறே கொண்டு செல்வதற்கும், தீர்மானங்கள் எடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் கூட தீர்மானங்கள் எடுக்காமல் இருப்பதற்கும் ஸ்ரீபவனது மிகப் பொருத்தமான முறை அது என்று எண்ணியதாக இருக்கலாம். இந்த நிலைமைக்கு ஸ்ரீபவன் அவர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவில் (மஹிந்த ராஜபக்ஷ நியமித்த சில அதிகாரிகளை நம்பியிருந்ததோடு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவர்கள் தற்போதைய அரசு காலத்திலும் தமது தேவைக்கேற்ப நீதித்துறையை நெறிப்படுத்துபவர்களாக இருந்தார்கள். அக்காலத்தில் கீழ்மட்ட நீதிமன்றங்களின் நீதியரசர்களது இடமாற்றம், பதவி உயர்வு என்பன அநேகமாக இந்த அதிகாரிகளது விருப்பு, வெறுப்புக்கேற்பவே நடைபெற்றன. அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு கொழும்பு மற்றும் வசதிகளுடைய நீதிமன்றங்கள் கிடைத்ததோடு அவ்வாறு இல்லாதவர்களுக்கு அவ்வாறற்ற நீதிமன்றங்களே கிடைத்தன.

ஒருமுறை நீதிச்சேவையாளர் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட நீதியரசர்களது இடமாற்றம் தொடர்பாக புள்ளிகளை வழங்கும் நியாயமான முறையுடனான பிரேரணை ஒன்று பிரதம நீதியரசர் ஸ்ரீபவனுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதுகுறித்து பலத்த திருப்தியைக்கொண்ட ஸ்ரீபவன் உடனடியாக அதன்படி நீதியரசர்களது இடமாற்றத்தை மேற்கொள்ள வாக்குறுதி அளித்தார். எனினும் இன்றும் அந்த முறை செயலில் இல்லை. நடந்தது, நீதிச் சேவை ஆணைக்குழுவின் அந்த இடமாற்ற முறையை கவனத்தில் கொள்வதாக கூறி தமது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்பட்டதாகும்.

புதிய பிரதம நீதியரசர் முன்னெடுக்கும் ஒரு சவால் இந்த இடமாற்ற கொள்கையை அமுல்நடத்துவதாகும். தமக்கு நீதி கிடைக்கும் என்ற கருத்து நீதியரசர்களுக்குள் உறுதிப்படுத்தப்படவேண்டும். கீழ் மட்ட நீதிமன்றங்களின் நீதியரசர்களிடம் இருக்கும் மற்றொரு மனக் கவலை மேலிருந்து வந்த நீதியரசர்களுக்கு நியமனம் பெறுவதற்கு கீழ் நீதிமன்றங்களின் நீதியரசர்கள் படுகின்ற கஷ்டத்தை பிரயோக ரீதியாக விளங்கிக்கொள்ளாமையாகும். வெளிக்கு கௌரவ கம்பீரமாக தென்பட்டாலும், மஜிஸ்டிரேட் நீதவான் என்பவர்கள் 24 மணி நேரமும் கடமை செய்யவேண்டியவர்களாவர். இலங்கை முழுவதும் நீதிமன்றங்களில் சேவையாற்றுவதற்காக அவர்கள் கடமைப்பட்டுள்ள போதும் அநேகரது மனைவி அல்லது கணவர் பிள்ளைகள் வேறு இடங்களிலே இருக்கிறார்கள். உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாத நீதிமன்றங்கள் மற்றும் இருக்கும் உத்தியோகபூர்வ இல்லங்களில் பாரதூரமான குறைபாடுகள் இருக்கின்ற நீதிமன்றங்களும் இருக்கின்றன. இனி ஆரம்ப நீதிமன்றங்களில் இருப்போரது பிரார்த்தனை தமது பிரச்சினைகள் குறித்து புரிந்துணர்வுடன் அவற்றை தீர்ப்பதற்கு தலையிடும் நீதியரசர்களும் மனிதர்களே என்ற உணர்வுடன் செயற்படும் பிரதம நீதியரசர் ஒருவரையே. புதிய பிரதம நீதியரசர் அந்த நம்பிக்கையை வென்றெடுப்பாரா?

இராமநாதன் கண்ணன் என்பவரை மேல் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பது தொடர்பான சிக்கல் எவ்வாறு தீர்க்க முடியாது என்று கூற முடியாதுள்ளது. கண்ணன் அவர்களை நியமிப்பதற்கு இவ்வளவு எதிர்ப்பு வருவதற்கு தமது நீதிச் சேவை பற்றி மேற்குறிப்பிட்டுக் கூறாத பல விடயங்கள் காரணமாக உள்ளன. தமக்குரிய கவனிப்பு கிடைக்காதவிடத்து வெளியிலிருந்து நீதித்துறைக்கு வரும் ஒருவர் பற்றி இயற்கையாகவே அவர்கள் எதிரிப் பார்வையிலேயே பார்ப்பார்கள். கண்ணன் அவர்களது நியமனம் முன்னுதாரணமாக அமைந்து நீதியரசர்கள் நியமனங்கள் இடம்பெறுமா என நியாயமான ஒரு சந்தேகம் தற்போதுள்ள நீதியரசர்களிடம் இருக்கின்றது. குறிப்பாக மேல்மட்ட நீதிமன்றங்களில் பதவி உயர்வு கிடைக்கும் தமது வாய்ப்புக்கள் இவ்வாறான நியமனங்களால் சவாலுக்கு உட்படுகிறது என்பது அவர்களது கருத்தாகும்.

நீதியரசர்கள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காக்கப்பட்ட நீதியரசர்களும் இருக்கிறார்கள். பொதுவாக நீதியரசர் ஒருவரைப் பற்றி முறைப்பாடு செய்ய வேண்டியது நீதிச் சேவை ஆணைக்குழு தான். அவ்வாறான முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்யும் செயற்திறன்மிகு முறையொன்றை காண்பது நீதியரசர்களது பிரார்த்தனையாகும். சில நீதியரசர்களது பிரேரணையானது நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் விசேட ஆணைக்குழு ஒன்றுக்கு அவ்வாறான குற்றச்சாட்டுக்களை சமர்ப்பித்து அவை பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என்பதாகும். அப்போது குற்றம் செய்தவர்கள் திருந்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். இலஞ்சம், மோசடி மற்றும் பக்கச்சார்பில் செயற்படுவது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கு இலக்கான தம்முடன் இருக்கும் நீதவான்கள் பற்றி அவர்கள் காண்பது நீதியரசர் தொழிலுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துபவர்கள் என்பதாகும். எனவே குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டவர்கள் தொடர்பாக வேகமாக செயற்படும் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கும் பொறிமுறை ஒன்று செயற்படுத்தப்பட்டால் சட்டத்தின்படி செயற்படும் தமது பெயரும், தொழிலும், பரிசுத்தமாகும் என்பதே நீதியரசர்களின் கருத்து.

நீதியரசர்களும் மனிதர்களே என்ற கோணத்தில் பார்த்தார். அவர்களது மனித உரிமைகளை பேணுவது முக்கியமாகும். சில நீதியரசர்களின் கருத்தாவது தாம் தொடர்பாக பாதிக்கப்படும் வகையில் உள்ள சுற்றுநிருபங்கள் ஒழுங்கு விதிகள் ஊடாக கருத்துக்களை தெரிவிக்கும் தமது மனித உரிமையும் பலமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதாகும். அவ்வாறான சுற்றுநிருபங்களை தயாரிப்பதற்கு கடந்த காலத்தில் இருந்த சில நீதியரசர்களது செயற்பாடுகள் காரணமாக இருந்ததோடு ஒட்டுமொத்தமாக தமது உரிமைகளுக்கு உதாரணமாக பகிரங்க இடங்களில் தோன்றுவது கருத்துக்களை தெரிவிப்பது குறித்து பலத்த தடைகள் போடப்பட்டுள்ளன என்பது அவர்களுடைய கருத்தாகும். நீதியரசர்களுக்கு கருத்துக்களை தெரிவிக்கும் நிலைமை இருக்க வேண்டும். அவ்வாறு கருத்துக்களை தெரிவிக்கும் பொறுப்பு தமக்கு ஒப்படைக்கப்படும் பட்சத்தில் சலுகை கூட தமக்கு கிடைக்கும் என நீதியரசர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

உயர்நீதிமன்றத்தை பொறுத்தவரையில் அதன் பதிவாளர் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு இருக்கும் குடும்ப உறவு தொடர்பாக அநேகர் சந்தேகத்துடனே பார்க்கிறார்கள். நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமன்றி நிலைநாட்டப்படுவதாக காட்டப்பட வேண்டும் என்கின்ற கருத்துப்படி அதன்மூலம் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்த பின்னணியின் கீழ் கடந்த காலங்களில் உயர்நீதிமன்றத்துடன் சார்ந்ததாக சில கொடுப்பனவுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருப்பதாக அறியக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக மேல் நிதிமன்றங்களில் வழக்கு ஈ.பைலின் முறையில் தொகுப்பதற்கு பெருமளவு கணனிகளை பயன்படுத்தினாலும், அந்த செயற்றிட்டம் தோல்வி கண்ட நிலையில் என்ன நடந்தது என்பது இன்னும் பிரச்சினையாக உள்ளது.

தகைமை இல்லாதவர்கள் நீதியரசர் தொழிலில் பிரவேசிப்பது அவர்களது பக்கச்சார்பு மற்றும் செயற்திறமை இன்மை என்பன வழக்கு தொடர வேண்டிய சந்தர்ப்பங்களில் வழக்கு தொடருவதும் அந்த வழக்குகளை ஏதாவது ஒரு தரப்பினரின் தேவைப்படி தீர்ப்பு வழங்குதல் குறைவாகவும், கூடுதலாகவும் கடந்த காலத்தில் காணப்பட்டது. ஆரம்ப நீதிமன்றங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும்போது அவற்றை காணும் அன்றன்று போய்வரும் மக்களிடையே நம்பிக்கை சீர்குலையும் நிலைமை ஏற்படலாம். நீதித் தொகுதி தொடர்பாக இங்கு கூடுதலான அவதானம் செலுத்தப்பட்டது. இந்த சகல நிலைமைகளையும் மாற்றுவது இப்போது தேவைப்பட்டிருப்பதை சொல்வதற்காகும். இலங்கையில் மனிதர்களுக்கு நீதிமன்றங்கள் இன்னும் தேவாலயங்களாகவே இருக்கின்றன. மொத்தமாக அந்த தேவாலயத்தின் கௌரவத்தை மேம்படுத்துவது புதிய பிரதம நீதியரசரின் முன்னிருக்கும் சவாலாக நாங்கள் கருதுகிறோம். அந்த சவாலை வெற்றிகொள்வதற்கு புதிய பிரதம நீதியரசருக்கு முடியுமாக இருக்கும் என்று நாம் எதிர்பார்ப்புடன் இருக்கிறோம்.

நன்றி 'ராவய'

நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# கிழக்கில் முஸ்லிம்களுக்கு கிடைக்கும் வெற்றியே வடக்கு, தெற்கு முஸ்லிம்களை வாழ வைக்கும்

## அமைச்சர் றிஷாத் பதியுதீன்

கிழக்கில் முஸ்லிம்களுக்குக் கிடைக்கும் வெற்றியே வடக்கிலும், தெற்கிலும் அவர்களை தலை நிமிர்ந்து வாழவைக்கும் - மட்டுவில் அமைச்சர் றிஷாத் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் எமக்குக் கிடைக்கும் வெற்றிதான் வடக்கில் மண்ணுக்காக போராடும் முஸ்லிம் மக்களின் வெற்றிக்கு அடித்தளமாக அமைவதுடன் தென்பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களின் அடிப்படை விடயங்களும் வெற்றிபெறும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான றிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு அண்மையில் மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு வர்த்தமானிப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் எங்களது கருத்துகளை அரசியல் தலைமைகளிடம் முன்வைத்துள்ளோம்.

அதேபோன்று உரிய அமைச்சர்களிடம் கலந்துரையாடினோம். இது தொடர்பில் ஜே.வி.பி.யினருடன் கலந்துரையாடவுள்ளோம். அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

நாங்கள் அரசாங்கத்தில் இருக்கின்ற போதிலும் அதனை நடைமுறைப்படுத்தக் கூடாது என்கின்ற நியாயமான காரணத்தை நீதிமன்றில் முன்வைக்கவுள்ளோம்.

இதன் காரணமாக திருகோணமலை உட்பட பல மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கு ஆபத்துகள் உள்ளன. இந்த ஆபத்துகளை தடுப்பதற்கு நாங்கள் நாடளாவிய ரீதியில் ஆய்வுசெய்து அறிக்கைகளை சமர்ப்பித்தோம்.

அவற்றில் ஒரு சில உள்வாங்கப்பட்டு பெரும்பான்மையான விடயங்கள் சேர்க்கப்படாமல் வர்த்தமானியில் பிரகரிக்கப்பட்டுள்ளன. பழைய முறையிலேயே தேர்தல் நடத்தப்படவேண்டும், விரைவாக நடாத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம்.இந்த நாட்டில் உள்ள முக்கிய கட்சிகளில் ஒன்றான தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு பல்வேறு தடவைகள் கோரிக்கைகள் விடுத்தன.

ஆனால் ஒரேயொரு முஸ்லிம் கட்சியுடன் மட்டுமே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சுவார்த்தைகள் இருந்து வருகின்றது. அந்த பேச்சுவார்த்தைகளின்போது உடன்பாடுகள் ஏற்பட்டது போன்று வெளிப்படுத்தப்படுவதையும் நாங்கள் அவதானித்துள்ளோம். வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமா பிரிந்திருக்க வேண்டுமா என்கின்ற வினா எழும்போது அதன் சாதக பாதக தன்மை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமை பேசவில்லையென்பது இன்று யதார்த்தமாகவுள்ளது. கிழக்கில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகவுள்ளார். வடக்கில் ஒரு தமிழர் முதலமைச்சராகவுள்ளார். வடக்கு தமிழ் தலைமையினால் வட - கிழக்கு இணைக்கப்படவேண்டும், சமஷ்டிவேண்டும் போன்ற தேவையான விடயங்கள் அடங்கிய பல்வேறு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு இந்த நாட்டுக்கும் சர்வ தேசத்திற்கும் சொல்லும் தன்மையினை நாங்கள் காணலாம்.

கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் மகிழ்ச்சியடைந்தாலும் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் அடையாளம் வடக்கும் கிழக்கும் இணைவதனால் இல்லாமல் போகும் நியாயமான அச்சம் எமக்குண்டு. நாங்கள் உருவாக்கிய கட்சி, எமக்காக உருவாக்கிய கட்சி இன்று முஸ்லிம் சமூகத்திற்கு சவாலாக உருவாகியுள்ளதா என்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.இந்த நாட்டில் எங்குமில்லாதவாறு மட்டக்களப்பில் அமீர்அலியினால் நிலத்தொடர்பற்ற கல்வி வலயம் உருவாக்கப்பட்டது.இன்று முதலமைச்சராகவும் அமைச்சர்களாகவும் வலம் வருபவர்கள் ஒரு வலய கல்வி பணிமனையை பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றால் அதற்கான பதிலை நீங்களே கூறவேண்டும். அம்பாறை மாவட்டத்தின் மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள்தான் உள்ளோம்.

வேறு யாரும் இல்லையென்று பேசும் தலைமை,அந்த மக்களின் காணி பிரச்சினைகள் தொடர்பில் எடுத்த நடவடிக்கை என்ன என்பது கேள்வியாகவே உள்ளது. கல்வியில் பிரச்சினை காரணமாக தமது மண்ணுக்காக இந்த நாட்டில் சயனைட் வில்லைகளை அணிந்துகொண்டு ஆயுதம் தூக்கி இளைஞர்கள் போராடிய வரலாறு இந்த




நாட்டில் உள்ளது.தனிநாட்டுக்காக ஆயுதம் ஏந்தியவர்கள் இன்று ஜனநாயக ரீதியாக தமது கோரிக்கைகளை முன்வைத்துவருகின்றனர். கடந்த காலத்தில் நீதியரசராக இருந்தவர் வடமாகாண முதலமைச்சராக இருந்துகொண்டு தமது இனத்திற்காக சில விடயங்களை பேசமுடியாத நிலையிலும் தன்னைப் பற்றி யார் விமர்சித்தாலும் பரவாயில்லையென்று தனது நோக்கத்திற்காக செயற்படுகின்றார். அவர் தனது சமூகத்திற்காகவும் தான் அமர்ந்துள்ள ஆசனத்தின் நோக்கத்தினை அடையவேண்டும் என்பதற்காகவும் தன்னை இழந்து பேசிவருவதையும் பல்வேறு போராட்டங்களை நடாத்திவருவதையும் அனைவரும் அறிவார்கள்.எங்களுக்கு என்று ஒரு கட்சி, எங்களுக்கென்று தனித்துவமான இயக்கம் அந்த இயக்கத்தின் தாயகமாகவுள்ள அம்பாறை மாவட்டத்திலே உள்ள பிரச்சினைகளை பார்க்கும்போது வேதனையாகவுள்ளது. இவர்கள் காதிருந்தும் கேட்காத செவிடர்களாகவும் அதிகாரங்கள் இருந்தும் பயன் படுத்தாத கையாலாகாதவர்களாகவும் இதுவரையில் இருந்து வருகின்றார்கள். மத்தியிலும் ஆட்சி அதிகாரம் உள்ளது.

மாகாணத்திலும் ஆட்சி அதிகாரம் உள்ளது. ஆனால் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாங்கள் அடையும் வெற்றிதான் வடக்கில் மண்ணுக்காக போராடும் முஸ்லிம் மக்களின் வெற்றிக்கு அடித்தளமாக அமைவதுடன் தென்பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களின் அடிப்படை விடயங்களும் வெற்றிபெறும்.அம்பாறை மாவட்டத்திலேயே முஸ்லிம்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன என்றால் இந்த நாட்டில் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் நிலைமைகள் தொடர்பில் நாங்கள் சிந்திக்க வேண்டும். நாங்கள் அரசியல் நோக்கத்திற்காக அரசியல் இருப்பினை தக்கவைப்பதற்காக இந்த கட்சியை ஆரம்பிக்கவில்லை. ஒரு கட்சிக்குள் இருந்த பயணிக்கவேண்டும் என்பதற்காக அதற்குள் இருந்து நியாயம் கேட்டதற்காக வெளியேற்றப்பட்டவர்களே நாங்கள் அதன் காரணமாகவே ஒரு கட்சியை அமைக்கவேண்டிய தேவைப்பாடு எங்களுக்கு ஏற்பட்டது. கட்சியில் இருந்து வெளியேறிய போது எங்களது அரசியல் அஸ்தமனமாகி விடும் என்று சிலர் கருதினர். இன்று நாங்கள் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இந்த ஆட்சியை ஏற்படுத்திய ஆறாவது தூணாக இருக்கின்றோம்.ஒரு குறுகிய காலத்திற்குள்ளேயே எங்களுக்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்தது.தலைமைத்துவத்தினை பாதுகாப்பதற்கு கட்சி தேவையில்லை. சமூகத்தினை பாதுகாப்பதற்காகவே கட்சி தேவை.கட்சியின் தலைமை தனது கடமையினை சரியாக செய்யவில்லையென்றால் தலைமையினை மாற்றுவதற்கான அதிகாரம் அந்த கட்சியிடம் இருக்க வேண்டும். அது தொடர்பான விடயங்களை எங்களது கட்சியின் யாப்பில் உள்ளடக்கியுள்ளோம்.அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பிரதியமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர்அலி, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஃரூப்,முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள்,கல்முனை மாநகர முதல்வர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், பிரதேச அமைப்பாளர்கள், கல்விமான்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## திருமலையில் தனியார் கல்வி நிலையங்களுக்கு பூட்டு

திருகோணமலையில் டெங்கு அபாயம் தீவிரம் அடைந்து வருகின்ற நிலையில் இன்று (08) முதல் தனியார் கல்வி நிலையங்களை இரண்டு வார காலத்திற்கு தற்காலிகமாக மூட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (7) மாலை 7.00 மணியளவில் திருகோணமலை தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுக்கும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி என்.வியகுமார் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் ஆகியோர் பங்கு கொண்ட கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் 45க்கும் அதிகமான தனியார் கல்வி நிலைய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்க லந்துரையாடலில் உரையாற்றும் போது கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுபாணி குறிப்பிடுகையில் திருகோணமலையில் டெங்கின் மூலம் உயிரிழந்த 5 பேரில் இருவர் மாணவர் அத்துடன் தற்போது டெங்கின் மூலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டள்ளவர்களில் அதிகமானவர்கள் மாணவர்களாக காணப்படுகின்றனர்.

அத்துடன் தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்தல் நடைபெறுகின்ற காலை மற்றும் பிற்பகல் நேரங்களிலேயெ அதிகமாக டெங்கு நோய் நுளம்புகள் தாக்கக் அதிகமாக காணப்படுகிறது எனவே தனியார் கல்வி நிலையங்களை இரண்டு வார காலத்திற்கு தற்காலிகமாக மூடுமாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி கோரியிருந்தார்

## கிளாசோ தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்





(க.கிஷாந்தன்)

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாசோ தோட்டத்தினை சேர்ந்த 300 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் 08.03.2017 அன்று காலை தோட்டத்தில் உள்ள தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்தோட்டத்தில் இருக்கின்ற தோட்ட வைத்திய அதிகாரி முறையாக சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லையெனவும் இதனால் தாங்கள் சுகாதார விடயத்தில் அதிகமான பாதிப்புகளை சந்திப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த 05 ஆம் திகதி இத்தோட்டத்தில் உள்ள ஆற்றில் 17 வயதுடைய மாணவன் குளிக்கச்சென்று சுழியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அப்போது தோட்ட வைத்தியரை அழைத்தபோது வைத்தியர் சம்பவ இடத்திற்கு வருகை தரவில்லை. இதனை கண்டித்தும் வைத்தியர் அடிக்கடி தோட்டத்தில் இருப்பதில்லையெனவும் வைத்தியரின் நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் கண்டுகொள்வதில்லை.

எனவே குறித்த வைத்திய அதிகாரியை தோட்டத்தினை விட்டு இடமாற்றம் செய்யுமாறு கோரியே தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தோட்டத்தில் உள்ளவர்களுக்கு நோய்கள் ஏற்படும் போது வைத்திய அதிகாரியால் பரிசோதனைகள் மேற்கொள்ளாமல் அசமந்தபோக்கில் இருப்பதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

சம்பந்தப்பட்ட வைத்தியர் அரசசார்பற்ற நிறுவனங்களை இணைத்துக்கொண்டு தொழிலாளர்களை ஏமாற்றி கடன் வழங்கி அதிகப்படியான வட்டி பணம் அறவிடுவதாகவும் பெற்றபணத்தினை மீளச்செலுத்த முடியாதவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்வதோடு வழக்கு தாக்கல் செய்வதாகவும் இதனால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக இத்தோட்ட தொழிலாளர்கள் கவலை அடைகின்றனர்.

தோட்ட வைத்திய அதிகாரியை இடமாற்றம் செய்யும் வரை ஆர்ப்பாட்டத்தினை தொடர்வதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

## ஸ்டார் ராசிக் மறைவுக்கு அஸ்வர் அனுதாபம்

மூத்த ஊடகவியலாளர் ஸ்டார் ராசிகின் மறைவு குறித்து முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் அனுதாபச் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது,

ஸ்டார் ராஸிக் எனப் புகழ் பெற்ற அப்துல் ராஸிக் உடைய மறைவு எம்மை மிகவும் கவலையில் ஆழ்த்துகிறது. அவரை 40 ஆண்டுகளுக்கு மேலாக நான் நன்றாக அறிவேன். ஊடகத்துறையிலே பிரபல்யம் பெற்றவர். தன்னுடைய பேனாவை சமுதாய நலனுக்காக வேண்டியும் சமய வளர்ச்சிக்காக வேண்டியும் முழுக்க முழுக்க பயன்படுத்தியவர். பாக்கிர் மாகார் முஸ்லிம் வாலிப முன்னணியை உருவாக்கிய போது கண்டி மாவட்டத்தில் அதுக்கு பெரும் துணையாக இருந்தது மாத்திரமல்லாமல் அதில் பெரும் பங்கு கொண்டு உழைத்து முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் மத்திய மாகாண வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பு செய்தார்.

## திருமலையில் டெங்கு தீவிரம்

(கந்தளாய் நிருபர் எப்.முபாரக்)

திருகோணமலையில் டெங்கு நோயால் நாள் ஒன்றுக்கு 100 பேர் பொது வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஆயினும் வைத்தியசாலையில் போதுமான இடவசதி ஆளணி மற்றும் படுக்கைகள் இல்லாதுள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி அனுசியா ராஜ்மோகன் தெரிவித்தார்.

டெங்கு நோய் பரவக்கூடிய இடங்களில் பொது அமைப்புக்களின் உதவியுடன் சேவை அடிப்படையிலான சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டு டெங்கு நோய் பரவக்கூடிய இடங்களை இனங்கண்டு கட்டுப்படுத்த வேண்டுமென்றும் இதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அக்குழுவுக்கானத் தேவைகளை மாவட்டதொண்டர் அமைப்புக்கள் மற்றும் ஆலயங்களின் நிதி அனுசரணையுடன் பூர்த்தி செய்வதெனவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் வீதி நாடகங்களை ஏற்பாடு செய்யும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதெனவும் அவர் மேலும் கூறினார்.

## காலி கந்தவத்தை மனாகிபு வைபவம்

காலி கந்தவத்தை காதிர் ஜும்ஆ பள்ளியில் 114 வது மனாகிபு வைபவம் 28.02.2017 மாலை 6.00 மணிக்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகியது. இறுதிநாள் நிகழ்வுகளும் பாரிய கந்தூரியும் 11.03.2017 சனிக்கிழமை நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதனையிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

காதிர் ஜும்ஆ பள்ளி காலி மா நகரின் மத்தியில் களுவெல்ல, ஒலனகொட, பலவத்த முஸ்லிம் மக்களின் பிரதான வணக்கத்தலமாக திகழ்வதோடு பிறமத சகோதரர்களாலும் குறிப்பாக பௌத்த, இந்து மக்களின் மதிப்புக்குப்பாத்திரமான ஒரு வணக்கத் தலமாக திகழ்வது குறிப்பிடத்தக்கது.

இங்கு குத்புல் அக்தாப் பர்துல் அஹ்பாப் ஸெய்யிதினா அப்துல் காதிர் ஸெய்யித் ஷாஹுல் ஹமீத் மீரான் ஸாஹிப் நாகூரி (ரழி) அன்னவர்களின் நினைவாக இயற்றப்பட்ட மனாகிபு தினமும் வாசிக்கப்படுவதுடன், உலமாக்களினால் மார்க்க உபன்னியாசம் நிகழ்த்தப்படுவதோடு தொடர்ந்து எட்டுத்தினங்கள் காலை தானம் வழங்கப்படும்.

இறுதி நாளாகிய 11.03.2017 சனிக்கிழமை மதியம் பாரிய கந்தூரி நடைபெறும்.

குத்புல் அக்தாப் பர்துல் அஹ்பாப் ஸெய்யிதினா அப்துல் காதிர் ஸெய்யித் ஷாஹுல் ஹமீத் மீரான் ஸாஹிப் நாகூரி (ரழி) அவர்களை ஹிஜ்ரி ஆண்டு 910 ஜமாதுல் ஆஹிர் பிறை 10க்குச் சரியாகிய வெள்ளிக்கிழமை 'தஹஜ்ஜத்' வக்தில் ஸெய்யிதா பாத்துமா அன்ஹா அவர்கள் ஈன்றெடுத்தார்கள். சங்கைக்குரிய மீரான் ஸாஹிப் அவர்களின் தந்தை மாணிக்கப்பூர் ஸெய்யித் ஹஸன் குத்தூஸ் ரஹ்மதுல்லா அவர்களாவர்.


நாகூரி ஆண்டகை என அழைக்கப்படும் சங்கைக்குரிய மீரான் ஸாஹிப் வொலியுள்ளாஹ் சிறு பராயம் தொட்டு பலராலும் வியக்கத்தக்க அற்புதங்கள் (கராமாத்துக்கள்) காட்டிய வரலாறு அன்னவர்கள் பற்றிப் பேசப்படும் வரலாற்றுப் புத்தகங்களில் (கிதாபு) களின் பதியப்பட்டுள்ளது சான்றாகும்.

அது மட்டுமன்றி இந்த நாதா தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே சில பல சந்தர்ப்பங்களில் அதாவது மூன்றுமாத கர்ப்ப நிலையிலும், ஏழு மாத கர்ப்ப நிலையிலும் தன் தாயுடன் பேசியதாகவும் சரித்திரம் கூறுவது அனைவரையும் மெய்சிலிக்கச் செய்கிறது. அல்லாஹ் நாகூரி ஆண்டகை தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே அல்லாஹ் குதுபாக ஏற்றுக்கொண்டு விட்டான் என்பது அனைவருக்கும் ஒரு படிப்பினையாகும்.

தற்காலத்தில் கராமாத்துக்களுக்கு மறுப்பும், எதிர்ப்பும் தெரிவிக்கப்படும் போது அல்லாஹ் நாடியவர்களுக்கு அனைத்தையும் கொடுப்பான் இதில் தர்க்கிப்பதற்கு எதுவுமில்லை என்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும்.

நாகூரி மீரான் ஷாஹிப் ஆண்டகைக்கு பதினைந்து மாதங்கள் பால் குடிக்கும் பச்சிளம் பாலகன் தாயின் மார்பகத்தில் பால்குடிக்க மறுக்கிறது. றமழான் தலைப்பிறையைத் தீர்மானிக்க முடியாத மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கார்முகில் வானத்தை மூடி பிறை தென்படுவதற்கான வாய்ப்பு இல்லை ஸெய்யிதா பாத்திமா அன்ஹா குழந்தை பால்குடிக்க மறுப்பது றமழான் தலைப்பிறையாக இருக்கலாம் என்று ஊகிக்கிறேன் என்று கூற மக்கள் இதனை ஏற்று நோன்பு நோற்றார்கள் அந்தமாக நோன்பு முப்பதாக நிறைவு பெற்ற வரலாறு கூறிப்பிடுகிது.

இது போன்று நூற்றுக்கணக்கான கராமத்துக்கள் நிறைந்த நாதா நாகூரி மீரான் ஆண்டகை. இளமைப் பருவத்தில் இருந்தே பலரும் போற்றத்தக்க விதத்தில் அன்னையின் வழிகாட்டலில் குண நலப் பண்புகளை வளர்த்துக் கொண்டார்கள். 'ஷரீயா' வழி நடந்து ஏனையோரையும் தம் வழி ஈர்த்துக் கொண்டு இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டாற்றினார். இதனை மேலும் வலுப்பெறச் செய்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்



ஹஸ்ரத் ஹிளுர் அலைஹிவஸ்ஸலாம் அவர்களுடன் நெருங்கிய உறவைப்பேண ஏற்பாடு செய்தான். இதன் காரணமாக நாகூரி ஆண்டகையின் இஸ்லாமிய அறிவும் ஞானமும் மேலும் விருத்தி பெற்றது. இஸ்லாமிய தஃவா பணிக்கு இப்பிணைப்பு பக்கபலமாக அமைந்தது. அல்லாஹ் அனைத்தையும் பொருந்திக் கொண்டு அனைத்து முஸ்லிம் அடியார்களுக்கும் நல்லதையே நாடட்டும்.

- ஏ.ஸ்.எம்.ஜிப்ரி

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

**உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர்** M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.) T.P: 0772810009. WhatsApp: 077 9697790 Email - nrahmathullah786@yahoo.com

நவமணி



# நலம் வாழ

செ.தர்ஷிகா

## யோகா எனும் ஒருங்கிணைப்பு



நவீன உலகில் மன அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளால் பலரும் அவதிப்படுவது தவிர்க்க இயலாததாகி வருகிறது. இது போன்ற பிரச்சினைகளில் இருந்து விடுபட யோகா பயிற்சியில் ஈடுபடுவோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

நோய்க்கும், நமக்குமான நட்பை பலப்படுத்தும் சூழலை மாற்ற வேண்டிய அவசியம் குறித்து நாம் கவனம் கொள்வதில் தாமதமாக இருந்து விடுகிறோம். அதனால் பல்வேறு உடல் சார்ந்த சிக்கல்களை நமது நண்பர்களாக மாற்றிக் கொள்கிறோம். வாழ்க்கையும் பிரச்னைகள் நிரம்பியதாக மாற்றிக் கொள்கிறோம். இந்த கைய சிக்கலில் இருந்து விடுபட யோகா முறைகளை கையாள்வது உலகமெங்கும் பரவலாக இருந்து வருகிறது.

யோகாவில் ஈடுபடுவது உடலுக்கு மட்டும் பயிற்சி அளிப்பதில்லை. மனதையும் சீரான முறையில் இயங்க வைக்கிறது. மனநிம்மதியானது எவ்வகையிலும் பாதிக்கப்படாமல், வாழ்க்கைப் பயணத்தை சீரான மகிழ்ச்சியுடன் கொண்டுசெல்ல யோகா பயிற்சிகள் பெரிதும் உதவுகின்றன. யோகா என்ற சொல் தமிழில் ஒருங்கிணைப்பது என்ற பொருளை தருகிறது.

மனிதன் தனக்குள் மறைந்து கிடக்கும் சக்திகளின் ஆற்றலை கண்டு கொள்வது என்பதே யோகா பயிற்சிகளின் அடிப்படை நோக்கம் ஆகும்.

பயிற்சிகளை தொடர்ச்சியாக செய்து வரும்போது மனதையும் நம்மால் ஒருமைப்படுத்த முடியும். இந்த பயிற்சிகள் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, நோய்கள் வராமல் தடுக்கும் பணியினை கச்சிதமாக செய்கின்றன.



# பெண்மையை அலட்சியப்படுத்தும் பெண்கள்



நடுத்தர வயதுள்ள 10 பெண்களில் இருவருக்கு கர்ப்பப்பை எடுக்கப்பட்டிருக்கும். மேலும் இருவர் அதை எடுத்து விடும் முடிவில் இருப்பார்கள். மனித உடலில் எந்தவொரு உறுப்பையும் இவ்வளவு சாதாரணமாக எவரும் தூக்கியெறிந்து விடுவதில்லை.

ஆனால், பெண்களைப் பொறுத்தவரை, குழந்தை பிறக்கும் வரைதான் கர்ப்பப்பை முக்கியமான ஒன்று. அதன்பின் அது அவர்களுக்கு தொந்தரவும், பிரச்சினையும் தரும் ஓர் அங்கமாகத்தான் இருக்கிறது. அதனால் தான் கர்ப்பப்பையை எடுத்ததை பெருமையான விஷயமாக பல பெண்களும் கருதுவதில்லை.

இந்த கொண்டாட்டமும், மகிழ்ச்சியும் அந்த பெண்களுக்கு நெடு நாட்கள் நீடிப்பதில்லை என்பது தான் சமீப ஆய்வுகளின் முடிவாகும். ஒன்றுமில்லாத காரணத்திற்காக கர்ப்பப்பையை அகற்றும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே போகிறது.

கர்ப்பப்பையை எடுத்தால் தான் உயிர் வாழ முடியும் என்ற நிலை இருந்தால் மட்டுமே அதை எடுக்க வேண்டும். (கட்டியின் அளவு, தன்மை, புற்றுநோய் எனில் அகற்றுவது அவசியம்). இல்லையென்றால் எடுக்கக் கூடாது. ஏராளமான பெண்கள் வயிற்றுவலி, அதிக உதிரப்போக்கு, நீர்க்கட்டி போன்ற காரணத்திற்காக கர்ப்பப்பையை எடுத்துவிடுகிறார்கள்.

இவற்றையெல்லாம் விட பெரிய கொடுமை, ஜாதகம்! வயிற்றில் கத்தி பட வேண்டும் என்று ஜாதகத்தில் உள்ளது, அதற்காக எடுத்து விட்டோம் என்கிறார்கள். இது எவ்வளவு பெரிய கொடுமை? உயிரை உருவாக்கும் புனிதமான கர்ப்பப்பை, அந்த அளவிற்கு இம்சை கொடுக்கிறதா? ஒருபோதும் இல்லை!

கர்ப்பப்பையை எடுத்தவர்களில் 60 சதவீதத்தினர், நிரந்தர நோயாளிகளாக மாறியிருக்கிறார்கள். தாங்க முடியாத தலைவலி, தூக்கமின்மை, போன்ற பல நோய்கள் அவர்களை எளிதில் தாக்குகின்றன. பல பெண்கள் தங்கள் பெண்மையைத் தொலைத்து விட்டோமே என்ற மனநல பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

மேலும் கர்ப்பப்பை இருக்கும் போது அவர்களிடம் இருந்த சுறுசுறுப்பும், துள்ளலும், காணாமல் போய் விடுகின்றன. எப்போதும் சோர்வாகவே காணப்படுகிறார்கள். அவர்களின் ஹீமோகுளோபின் குறைந்து கொண்டே வருகிறது. கர்ப்பப்பை அலட்சியமான ஒன்றல்ல. அதை எடுக்க வேண்டும் என்று ஒரு மருத்துவர் தெரிவித்தால், மேலும் பல மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெற்று முடிவெடுங்கள்.

## தாய்மை பராமரிப்பு

தாய்மை ஒரு பெண்ணின் வாழ்வை முழுமையடையச் செய்கிறது. குழந்தை பெற்றெடுக்கும் தருணம் முதல் அக் குழந்தை வளர்ந்து பெரியவனாகி, அவன் ஆசைகளை நிறைவேற்றி, அவன் வாழ்வில் வெற்றி பெறுவதை காணும் வரையில் அவள் தாய்மை உணர்வு சிறு அளவும் குறைவதில்லை.



அத்தகைய தாய்மையை பெற்ற பின் பெண்கள் தங்கள் உடல் நலத்தையும் பேணி பாதுகாக்க வேண்டும். ஏனெனில் குழந்தையை பேணி பாதுகாக்கும் பெண்கள் அவர்களின் உடல் நலனில் அக்கறை கொள்ளாது பலவிதப் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்கின்றனர்.

குழந்தை பெற்றெடுத்த பின் அவளுக்கு ஏற்படும் உடல் சத்து இழப்பு மற்றும் உடல் பலவீனம் போக்கவும், குழந்தைக்கு தாய்ப்பால் அளிப்பதற்கு ஏற்ற ஊட்டச்சத்து பெறவும் முறையான ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ளுதல் வேண்டும். இதன் மூலம் பிரசவத்திற்கு பின் ஏற்படும் பிரச்சினைகளை களைய முடிவதுடன், நல்ல ஆரோக்கியத்துடன் குழந்தையை பராமரிக்கவும் முடியும். அருந்தவம் பெற்று அன்னையாய் மாறிய பின் நலம் தரும் ஊட்டச்சத்து உணவே அவர் நலம் பேணும் என்பதே உண்மை.

பிரசவத்திற்கு பின் தாயானவள் பல மாறுதல்களை அதாவது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அடைகிறாள். எனவே அதற்கேற்ப தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். குழந்தையை தாயும், அவளது உற்றார் உறவினர்களும் கனிவுடன் கவனிப்பது போல், தாயையும் நல்ல ஓய்வெடுக்கச் செய்து, ஊட்டச்சத்து உணவுகளை அளித்து பாதுகாத்திட வேண்டும்.

உணவுகள் என்பது குழந்தைக்கு தாய்ப்பாலை பெருக்கும் விதமாகவும், பிரசவ வலி மற்றும் காயங்கள் சீக்கிரமே ஆறும் விதத்திலும் அமைந்திட வேண்டும். பெரும்பான்மையான மருத்துவர்கள் பிரசவித்த தாய்மார்கள் பசிக்கின்ற போது எல்லாம் உணவுகளை உட்கொள்வது அவசியம் எனக் கூறுகின்றனர்.

புரத சத்துள்ள உணவுகள், இரும்பு சத்து உணவுகள், பச்சைக்காய்கறிகள், பழங்கள், உட்புற மற்றும் வெளிப்புற காயங்களை ஆற்றும் தன்மை கொண்ட மஞ்சள் போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ளும்போதே தாய்மையின் பொறுப்பை செவ்வனே செய்யும் சக்தி பெறுகிறாள்.

## காஸா புனர்நிர்மாண யோசனை

பலஸ்தீனின் 22 வயதுடைய சிவில் பொறியியல்துறை மாணவி மஜித் மஷ்ராவி சாம்பலில் இருந்து காஸா நகரை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்ற புதிய ஆலோசனையை முன்வைத்துள்ளார்.

கரியையும், விறகுச் சாம்பலையும் பயன்படுத்தி ஒரு புதிய வகையான கல்லை அவர் உருவாக்கியுள்ளார்.

காஸாவில் ஸ்தம்பிதமடைந்துள்ள புனர்நிர்மாணப் பணிகளுக்கு ஒரு தீர்வாக இது அமையும் என்பதே அவரின் நம்பிக்கை.

ஒரு வருடகால பரிசோதனையின் பின்னர் இவர் தனது நண்பர் ரவான் அப்துல் லதீபோடு இணைந்து இந்த புதிய வகையான செங்கல்லை உருவாக்கியுள்ளார்.

இதற்கு கிரீன் கேக் என அவர் பெயரிட்டுள்ளார். இந்த செங்கல் சாதாரண கற்களை விட பாதி விலை குறைவானதாகும்.



## ஆசிரியர் சொல் கேட்காத மாணவரா?

கரும்பலகையில் 1000 என்று எழுதிவிட்டு, தன் வகுப்பறையில் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து அவனது கணித ஆசிரியர், இது எவ்வளவு? என்று கேட்டார்.

நம்பிக்கையுடன் இருந்தாலும், கேள்வியின் எளிமையைக் கண்டு சற்று அவமானமாக உணர்ந்து, ஓராயிரம், என்று அவன் பதிலளித்தான். இப்போது ஆசிரியர் கூடுதலாக ஒரு பூஜ்யத்தை அந்த எண்ணின் வலப்பக்கம் 10000 என எழுதிவிட்டு, அது எவ்வளவு என்று அவனிடம் மீண்டும் கேட்டார்.

பத்தாயிரம், என்று உடனடியாகப் பதில் வந்தது. இப்போது இன்னொரு பூஜ்யத்தை அந்த எண்ணின் இடப்பக்கம் 010000 என்று எழுதி விட்டு, அது எவ்வளவு என்று கேட்டார். அதே பத்தாயிரம் என்று அவன் பதில் கூறினான்.

ஆசிரியர் அவனைப் பார்த்து கண் சிமிட்டிப் புன்னகைத்தவாறே, ஒரு முக்கியத்துவமற்ற எண் ஒரு முக்கியம் வாய்ந்த என்னைப் பின்தொடர்ந்து செல்லும்போது, அதன் மதிப்பு கூடுகிறது.

அதே எண் அந்த முக்கியத்துவம் வாய்ந்த எண்ணிற்கு முன்னால் செல்ல முயற்சிக்கும் போது, அதற்கு மதிப்பேதும் இல்லை. அது போன்றதுதான் ஆசிரியருக்கும், மாணவனுக்கும் இடையே உள்ள உறவும். ஒரு மாணவன் தன் ஆசிரியரைப் பின்தொடர்ந்து சென்றால், அவனது மதிப்பு கூடுகிறது. அதுவே தலைகீழாக அமைந்தால்?

பதில் உனக்கே தெரியும் என்று கூறினார்.



# அறிவுலகம்



- வை.எம். ஆஷிக்

## நம் முதல் எதிரி; தயக்கம்



நீல் ஆம்ஸ்ட்ரோங்கிற்கு முன்னர் நிலவில் முதன் முதலில் கால் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா? பலருக்கு தெரியாது. அவர் எட்வின் சி ஆல்ட்ரின். அவர்தான் நிலவுக்கு சென்ற அப்பலோ விண்கலத்தின் பைலட். அதாவது விமானி.

ஆல் ட்ரின் அமெரிக்காவின் விமானப் படையில் பணிபுரிந்தவர். விண் நடை அனுபவம் உள்ளவர். அவர் விமானியாக நியமிக்கப்பட்டார். நீல் ஆம்ஸ்ட்ரோங் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். இவர் மிகுந்த தைரியசாலி என்பதனாலே பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் கோ-பைலட். அதாவது இணை விமானி. இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும், நாசாவிலிருந்து பைலட் பெர்ஸ்ட் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஆல்ட் ரினுக்கோ மனதில் சின்ன தயக்கம்.

இடது காலை எடுத்து வைப்பதா? வலது காலை எடுத்து வைப்பதா? என்றல்ல. 'நிலவில் முதன் முதலில் கால் எடுத்து வைக்கிறோம். புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்து விட்டால், எரி மணலாக இருந்து காலை சுட்டு விட்டால் என்ற தயக்கத்தில் மணிக்கணக்காக தாமதிக்கவில்லை. சில நொடிகள் தான் தாமதித்திருப்பார்.

அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கோ பைலட் நெக்ஸ்ட். நீல் ஆம்ஸ்ட்ராங் கட்டளை வந்த அடுத்த நொடி காலடி எடுத்து வைத்தார். ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப் பட்ட உலக வரலாறு!

உலக வரலாறு ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும் தகுதியும் இருந்தும் கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரியவில்லை.

முதலாவது வருபவரைத்தான் இந்த உலகம் நினைவில் வைத்திருக்கும் என்பது மட்டுமல்ல, தயக்கம், பயம் இவை எந்த அளவுக்கு நம் வெற்றியை பாதிக்கும் என்பதற்கு இதுவே உதாரணம்.

இனி நிலவை பார்க்கும் போதெல்லாம் இந்தச் சம்பவத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு நிமிட தயக்கம் நம்முடைய மிகப் பெரிய வெற்றிகளைத் தடுத்துவிடுகிறது. நாம் எல்லோருமே மிகப்பெரும் சாதனைகளை படைக்கிற வல்லமை உடையவர்கள்தான். நம்முடைய தயக்கம், பயம், கூச்சம் இவைதான் நம் முதல் எதிரி.

# உலகமும் பத்தும்

சாத்தான்குளம் அப்துல் ஜப்பார்



## சிரிப்பு

வேறு ஜீவராசிகளுக்கு இல்லாத, மனிதனுக்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பு சிரிப்பு. கலைவாணர் ஒரு திரைப்படப் பாடலில், அதிகாரிகளின் ஆணவச் சிரிப்பு அடங்கி நடப்பவனின் அசட்டுச் சிரிப்பு சதிகாரர்களின் சாகசச் சிரிப்பு சங்கீதச் சிரிப்பு என்று சிரிப்பை வகைப்படுத்துவார்.

மென்னகை- புன்னகை- எள்ளல் சிரிப்பு- ஏளனச்சிரிப்பு- கள்ளச் சிரிப்பு- கனிவான சிரிப்பு- காட்டான் சிரிப்பு- கபடச் சிரிப்பு- காதல் சிரிப்பு- கடிச் சிரிப்பு- கல கலச் சிரிப்பு- கலவரச் சிரிப்பு- சரளச் சிரிப்பு- சாகசச்சிரிப்பு- மயக்குச் சிரிப்பு- மந்தகாசச்சிரிப்பு- எக்காளச் சிரிப்பு- எகத்தாளச் சிரிப்பு- அழுகையுடன் கூடிய சிரிப்பு- அலறல் சிரிப்பு- அட்டகாசச் சிரிப்பு- ஆரவாரச் சிரிப்பு- பயந்த சிரிப்பு- பவ்யச் சிரிப்பு- சினத்துடன் கூடிய சிரிப்பு- சீற்றத்துடன் கூடிய சிரிப்பு- சில்லறையை சிதற விட்டது போன்ற சிரிப்பு- வீண் சிரிப்பு- விரக்திச் சிரிப்பு- குத்தாட்டச் சிரிப்பு- கும்மாளச் சிரிப்பு- கூளைக் கும்பிடு சிரிப்பு- கனைக்கும் சிரிப்பு- கம்பீரச் சிரிப்பு- பிளிறல் சிரிப்பு- பீடு நடை சிரிப்பு என்பது போக, எம்.என்.நம்பியார், பீ.எஸ்.வீரப்பா, குமரி முத்து ஆகியோரின் தனித்துவம் வாய்ந்த சிரிப்புகளும் இருக்கின்றன.

வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும். யோகாவில் லாஃப்பர் தெராபி என்கிற ஓர் அம்சமும் உண்டு. சிலரைப்பற்றிச் சொல்லும்போது, சிரிச்சுச்சிரிச்சே கவுத்துடுவான் என்கிறோம். சிரிப்பு ஒரு நல்ல ஆயுதம் என்று கொள்ளலாமா ?

பெண்கள் வெளியில் கேட்கும் அளவுக்கு சப்தம் போட்டு சிரிக்கக் கூடாது என்பது ஆணாதிக்க வாதிகளின் கூற்று இவர்களே தான் பொம்பள சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்சாப்போச்சு என்கிற பழமொழியையும் சொல்லி வைத்து இருக்கிறார்கள்

சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே என்கிற மக்கள் திலகம் எம்ஜீஆர்-ன் திரைப்படப் பாடல் வரிகள் வாழ்க்கையின் நியதியாக அமைந்தால் உத்தமம்.

ஏ.எஸ்.எம்.ஜாவித்

# குண்டர்களின் காணி அபகரிப்பால் அவதியுறும் நிந்தனி முஸ்லிம்கள்



புத்தளம் நகரில் புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நிந்தனிக் கிராமத்தில் மன்னார் மூர்வீதி முஸ்லிம் மக்களினால் சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 23 ஏக்கர் காணி புத்தளத்தில் உள்ள ஒருசில கள்வர்களாலும், குண்டர்களால் அபரிக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வடமாகாணத்தில் இருந்து ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலிகளால் வடமாகாணத்தை விட்டு விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் புத்தளம் உள்ளிட்ட வடமாகாணத்திற்கு வெளியே பலபகுதிகளில் அகதிகளாக தஞ்சமடைந்து இன்று வரை வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு சுமார் 26 வருடங்களாக அகதிகளாக வாழும் வடமாகாண மக்களில் பெரும்பகுதியினர் புத்தளத்தையே தஞ்சமாகக் கொண்டு அந்த மக்களின் அரவணைப்பில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு வாழ்ந்து வரும் மக்களில் பலர் அகதி முகாம்களில் வாழ்ந்து வந்த நிலையில் தத்தமது சுய உழைப்பின் பெயரில் தமது குடும்பங்களை வாழ வைப்பதற்காக தமது வசதிகளுக்கு ஏற்ப ஐந்து அல்லது பத்துப் பேர்ச்சஸ் காணிகளைக் கொள்வனவு செய்து ஒருசிலர் ஓலைக் குடிசைகளையும் மற்றொரு சாரார் தமது வசதிக்கு ஏற்ப சிறுசிறு கல்வீடுகளையும் கட்டி வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தமது கிராமங்களின் அடிப்படையில் புத்தளத்தில் ஒவ்வொரு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு வாழ்ந்து வருபவர்களில் மன்னார் மூர்வீதியைச் சேர்ந்த முஸ்லிம் மக்களும் தமது கிராமத்தை அடையாளப்படுத்தவதற்காக புத்தள நகரப் பகுதியில் குருநாகல் வீதியில் நிந்தனி எனும் பகுதியில் 1997ஆம் ஆண்டு தனிநபர் ஒருவரின் பூர்வீக இடத்தில் சட்ட ரீதியாக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 11101 எனும் இலக்க உறுதி மூலம் பெறப்பட்ட சுமார் 23 ஏக்கர் காணியை சொந்தப் பணத்தைக் கொடுத்து அந்தக் காணியை மன்னார் மூர் வீதி மக்களின் சமூக முன்னேற்ற அமைப்பு மூலம் (ஓ.எஸ்.யு) சட்ட ரீதியாக் கொள்வனவு செய்தனர்.



மேற்படி காணி 1997.01.21ஆம் திகதி சட்டத்தரணி முஹமட் ஸப்ரி நிலாம்டீன் என்பவரினால் பள்ளிவாசல், பாடசாலை மற்றும் பொது மண்டபங்கள் உற்பட ஒரு நபருக்கு 10பேர்ச்சஸ் படி சுமார் 276 பேருக்கு தனித்தனியாக அவரவர் பெயரில் உறுதி எழுதப்பட்டு வழங்கப்பட்டது.



இவ்வாறு வழங்கப்பட்ட காணியில் சுமார் 15 குடும்பங்கள் வரை அப்பகுதியில்சிறிய வீடுகளைக் கட்டி வாழ்ந்து வருவதுடன் பள்ளிவாசல் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. மேலும் சிலர் அரைகுறையாக வீடுகளைக் கட்டியுள்ளதுடன் பலர் வருமானக் குறைவு காரணமாக வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியாத நிலையில் பல வருடங்கள் கடந்துள்ள நிலையில் அப்பகுதியில் தத்தமது காணிகளை எல்லையிட்டிருந்த நிலையிலும் பாராமரிப்பு சரியாக இடம்பெறாத காரணத்தால் சிறு பற்றைக்காடுகள் வளர்ந்து அந்த மக்களும் அதனைக் கண்டு கொள்ளாதிருந்தனர்.

இவ்வாறான நிலையில் புத்தளம் மற்றும் தில்லையடிப் பகுதியைச் சேர்ந்த ஒருசில கள்வர்களும், குண்டர்களும் ஒருசில அரசியல் பின்புலங்களை கொண்டு அந்தக் காணிகளை புல்டோசர்கள், பெக்கோ இயந்திரங்கள் கொண்டு எல்லைகளையும், பற்றைக் காடுகளையும் தள்ளி அங்கு கட்டப்பட்டிருந்த கட்டிடங்களையும், அத்திவாரங்களையும் இடித்து புதிதாக வேலிகள் அமைத்து அவற்றை தமது காணிகள் என்று கூறுவதுடன் அந்த மக்களை அப்பகுதிக்குள் செல்ல விடாது அச்சுறுத்தியும் வருகின்றனர்.

இதனை அறிந்த ஏனைய மக்கள் அங்கு சென்று பார்த்தபோது விடயம் உண்மையாக இருப்பதையிட்டு புத்தளம் பொலிசில் மேற்படி காணிகள் அபகரிக்கப்பட்டமை தொடர்பாக பலர் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். முறைப்பாட்டின் பின்னர் பொலிஸாரிடம் கேட்டால் பொலிஸார் காணிக்குள் சென்று நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது எனக் கையை விரித்துள்ளதுடன் வழக்குத் தொடருமாறும் கூறிவிட்டனர்.



பொலிஸாரின் மேற்படி கூற்று பாதிக்கப்பட்ட மக்களை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளதுடன் என்ன செய்வதென்று தெரியாது அங்கலாய்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஓ.எஸ்.யு அமைப்பு கொழும்பில் கடந்த மாதம் ஒரு கூட்டத்தைக்கூடி கலந்துரையாடியதற்கு அமைவாக காணியுள்ள அனைவரையும் கடந்த மார்ச் 4ஆம் திகதி நிந்தனிக்கு அழைத்து கூட்டம் ஒன்றை நடாத்தியதுடன் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நவவி அவர்கள் அமைச்சர் றிஷாத் பதியுதீன் பணிப்பின் பெயரில் குறித்த இடத்திற்கு வருகை தந்து அந்த மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து புத்தளம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று தலைமைப் பொலிஸ் அதிகாரியுடன் கலந்துரையாடிய பின்னர் பாதிக்கப்பட்டவர்களை முறைப்பாடு செய்து வழக்குத் தாக்கல் செய்யும்படியும் கூறியுள்ளார்.

குறித்த பகுதியில் காணியை அபகரித்த குண்டர்களை பிடித்து கூட்டினுள் போடாது வழக்குத் தாக்கல் செய்யச் சொன்னமையில் மக்களுக்கு பொலிஸார் மீது நம்பிக்கையற்றுள்ளதுடன் ஒவ்வொரு வரும் 10 பேர்ச்சஸ் காணிக்காக தனித்தனியாக வழக்குப் போட்டு தேவையற்ற செலவுகளும், கால நேரங்களுமே ஏற்படும் என்றும் பொலிஸார் சரியான முறையில் அப்பகுதிக்கு பாதுகாப்பு வழங்கி அக்காணிகளை அந்த மக்களை வேலிகள் அடைக்க நடவடிக்கை எடுத்தால் நல்லது என்ற விடயத்தைச் சுட்டிக் காட்டியும் எந்தவிதப் பயனுமில்லாது போய் விட்டதுடன் மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

பொலிஸார் சரியான முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அப்பகுதியில் ஒரு பாதுகாப்பு அரணைப் போட்டு அந்தக் காணிகளை மீட்டெடுக்க முடியும் ஆனால் இது விடயத்தில் பொலிஸார் பின்வாங்குகின்றனர். இது விடயத்தில் அமைச்சர் றிஷாத் உள்ளிட்ட முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன் கவனம் செலுத்தி சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்த அந்தக் காணிகளை மீட்டுத் தருமாறு விநயமாகக் கேட்கின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட இந்த மக்களின் காணிகளை மீட்டெடுப்பதற்கு முஸ்லிம் தலைமைகள் என்று கூறிக் கொண்டு வாக்குக் கேட்கும் அரசியல் வாதிகள் இது விடயத்தில் கவனஞ் செலுத்வார்களா?. என அந்த மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

---

சூரி ரத்னபால

# அரசியலமைப்பு அரசாங்கத்தின் நிறுவனம் சார்ந்த நிலைமை

**(நேற்றைய தொடர்ச்சி...)**

பண்டைய சட்ட நியமமாகிய pacta sunt servanda (ஒப்பந்தங்கள் அவதானிக்கப்பட வேண்டும்) என்பது மக்கள் மற்றும் சொத்துக்கள், நேர்மைத்தன்மை, மூன்றாம் நபர் நடுவர்கள் தொடர்பில் பாரபட்சமற்ற தன்மை (முறிவு / மீறலின் போது) சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரிகளின் நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கான மரியாதை தொடர்பிலான ஏனைய பல்வேறு நியமங்களினால் ஆதரவளிக்கப்படுகிறது. நீதித்துறையின் சுயாதீனம் மற்றும் பாரபட்சமற்ற தன்மை ஆகிய தலையாய அரசியலமைப்பு நியமம், மிகவும் பாதிக்கப்பட்ட பிரசைகள் மற்றும் அதிகாரிகளின் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளல் மாத்திரமல்லாது நீதித்துறையின் ஒழுக்கவியல் மற்றும் பொறுப்புடமை தொடர்பாகவும் தங்கியிருப்பதால் சட்ட ஆட்சிக்கு அது மிகவும் அவசியமாகும்.

'விதிகளுக்கு இணங்க விளையாடுதல்' எனும் முழுமையான கலாசாரத்தை உருவாக்கும் ஏனைய பல நியமங்களின் பெறுபேறு அத்தகைய ஏற்றுக்கொள்ளல் ஆகும்.

அரசியலமைப்பு அரசாங்கத்தின் பாரிய அபாயங்களில் ஒன்று. சட்டத்தரணிகள் மற்றும் பொருளியலாளர்களின் போதியளவு கவனத்தைப் பெற்றுக்கொள்ளாத அபாயம் - பாரிய துண்டிப்பு என Frazcis Fkuyama குசயணஉளை குரமரலயஅய என்பவர் விபரித்ததிலிருந்து தோன்றியது. மரபு ரீதியான விபரல் (தாராளமய) அரசியலமைப்பு கொள்கையாளர்களில் (நான் உள்ளடக்கப்பட்டுள்ளேன்) அனேகர், சட்ட ஆட்சிக்கான முறைசார் அக்கறுத்தல்களுடன் நியாயப்படுத்தும் வழிமுறைகளில் உள்ள போதும் சுதந்திர சமூகத்தின் சமூக அடிப்படைகள் அழிவடைவது பற்றி பழைமைவாத அபாய எச்சரிக்கை ஒலியை கேட்கத்தவறிவிட்டனர். குடும்பங்கள், வகுப்பறைகள், சபை அறைகள், தொழிற்சாலைகள் மற்றும் அயலவர்கள் தொடர்பாக நடைபெறுவதுடன் அரசியலமைப்பு அரசாங்கத்தை இணைப்பதற்கு முனையும் தடைசெய்யப்பட்ட சட்டம் தொடர்பாக பயிலும் சட்டத்தரணிகள் மற்றும் புதிய மரபு ரீதியில் பயிற்றப்பட்ட பொருளியலாளர்கள் ஆகியோருக்கு இது சுலபமான விடயமல்ல. எனினும், இணைப்புகள் உண்மையானவையாகவும் போதியளவாகவுமுள்ளன. சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரர்களுக்கு தொழில்வாண்மைக்குரிய மதியுரையை வழங்கும்போது நீதிமன்றங்களில் நியமங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் மாத்திரம் சிந்திக்கும் போக்கை உடையவர்கள். எனினும் புரிந்துணர்வு, ஆதரித்தல் ஆகியவை தொடர்பாக பரந்த இலக்கை கொண்டிருப்பதோடு பொதுவாக சட்ட ஆட்சி தொடர்பில் எதிர்வாதம் செய்கின்ற சட்டத்தரணிகள் - விரிவுரையாளர்களாக, நீதிபதிகளாக சட்டம் இயற்றுபவர்களாக (பாராளுமன்ற உறுப்பினர்களாக) மற்றும் பொறுப்புரை பகிரங்கசேவை அதிகாரிகளாக சேவையாற்றும் சட்டத்தரணிகள் உட்பட - சட்ட ஆட்சி பற்றி உணர்ந்து கொள்வதற்கு மேற்கொள்ளும் பாரிய பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றனர். அதேபோன்று எது அளவிடக்கூடியது என்பதற்கு தம்மை மட்டுப்படுத்திக்கொள்வதோடு நிறுவனம் மற்றும் பழைமைவாத அறிவு ஆகியவற்றில் நம்பிக்கையற்ற பொருளியலாளர்கள் சான்றுகள் தொடர்பான உணர்வுகளிலிருந்து புறக்கணிப்பதை கைவிட்டு மரபு ரீதியான அவதானம், கருத்துரைத்தல், முடிவுகூறல், தற்காலிக முடிவு மற்றும் தாபிக்கப்பட்ட முன்மொழிவுகளை மேற்கோள் காட்டுதல் மற்றும் ஏனைய துறைகளில் உள்ள கண்டுபிடிப்புகள் ஆகியவற்றில் அக்கறை செலுத்துவதற்கு (2000, 20) Peter Bauer என்பவரின் மதியுரையை கவனத்திற்கொள்ள வேண்டும்.

குடும்பம் பிரிந்துபோதல், தாய் அல்லது தந்தையுடன் வளரும் பிள்ளைகள், போதைவஸ்து பாவனை (துஷ்பிரயோகம்), குற்றச்செயல்கள், அவசியமான வாழ்க்கைத் திறன்களின்மை, நம்பிக்கை குறைவு, அதிகளவு வழக்குத் தாக்கல்கள், நலன்புரியில் தங்கிவாழுதல், சமூக சீர்குலைவுகளுக்கான ஏனைய அறிகுறிகள் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்புகள் சில சமூக விஞ்ஞானிகள் கோருவது போல அனுபவரீதியான துல்லியத்துடன் தாபிக்கப்பட முடியாது.

இத்தகைய சகல துக்ககரமான நிகழ்வுகளும் நடைபெறுவதற்கான காரணங்களைக் கண்டறிய முடியாதுள்ளது. எனினும், இந்த விடயங்கள் தொடர்பாக அதிகரித்துவரும் புள்ளிவிபரங்கள் சான்று பகர்கின்றன. (Fukuyama 2000, அதிகாரம் 2 பின்னிணைப்பு) அதாவது 20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கைத்தொழில் மயமாக்கப்பட்ட சனநாயகங்களை தோற்கடித்துச் செல்லும் பரவலான தோற்றப்பாடுகளின் பகுதிகளாக அவை தீவிர சந்தேகங்களை எழுப்புகின்றன. சமூக ஒழுங்கீனங்கள் அரசியலமைப்பு அரசாங்கத்தைப் பல்வேறு வழிகளில் பாதிக்கின்றன. அவ்வழிகளில் சில ஏனையவற்றை விட நியாயமானவை. ஒப்பந்தங்களை அகௌரவப்படுத்துதல் அதேபோன்று குற்றங்கள் மற்றும் ஆட்கள் மற்றும் சொத்துக்களுக்கெதிரான குடியியல் தவறுகள் என்பன சட்ட ஆட்சியின் வரைவிலக்கணத்துடன் சீரானவையாக இல்லை. எனினும், அவை சீரற்ற ஆத்மாக்கள் உள்ள சமூகங்களில் நடைபெறுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. சட்டத்தை அமுல்படுத்துதல் மூலம் இத்தகைய பிரச்சினைகளுக்கு ஆதரவு வழங்கும் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் சமூகங்கள் தண்டனை மற்றும் நட்டஈடுகளை ஏற்றுக்கொள்கின்றன. எனினும், இத்தகைய சமூக நடத்தைகளுக்கு எதிரானவை அடிக்கடி நிகழும் போது சட்ட ஆட்சி நிலைத்து நிற்பதற்கு அச்சுறுத்தலாக அமைகின்றது. எவ்வாறெனில், சட்டமுறைமைகள் அவ்வாறு வடிவமைக்கப்பட்டுமில்லை. அத்துடன் சட்டத்தன்மையற்ற பரவுகைக்கு இணங்க அவை உண்மையில் மீள வடிவமைக்கப்படவுமில்லை. ஆட்கள் அல்லது சொத்துக்களுக்கு எதிராக குற்றம் இழைக்கப்படும் போது, அதன் வடு மிகத்தெளிவாக உள்ளதோடு பாதிக்கப்பட்டவரும் பொதுவாக அறியப்படுகிறார்.

மற்றைய நெறிபிறழ்வுகை வகுதியில் பாதிக்கப்பட்டவர் அற்ற அல்லது ஏனையவருக்கு தீங்கிழைத்தல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட முடியாத அளவிற்கு இருத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ள முடியும். இந்த வகுதி போதைவஸ்து துஷ்பிரயோகம் மற்றும் நலன்புரியில் நீண்டகாலம் தங்கிவாழுதல் ஆகியவறறை உள்ளடக்குகிறது. இத்தகைய நெறிபிறழ்ந்தவர்கள் தம்மை பிழை செய்பவர்கள் அன்றி பாதிப்புற்றவர்களாகவே நோக்குகின்றனர். சில சந்தர்ப்பங்களில் தடுக்கப்படக்கூடிய மற்றும் தடுக்கப்பட முடியாத தொழிற்பாடின்மை ஆகியவற்றிற்கிடையிலான எல்லை கோட்டை வரைவது கடினமான காரணமாகுமெனினும் ஏனைய அநேக விடயங்களில் அது உறுதிவாய்ந்ததாகும். நலன்புரி மாநிலங்கள் சட்டத்தின் கீழ்வரும் மக்களின் நெறிபிறழ்வுகைக்கு இத்தகைய செலவின அனுமதியை வழங்குகின்றன. ஏனையோரின் எழுந்தமான நடத்தையானது சட்ட ஆட்சியை நேரடியாக மறுத்துரைக்கின்ற சந்தர்ப்பமாகிய சட்டத்தைப் பின்பற்றுபவர்களின் சொத்துரிமைத் தூய்மையைக் கெடுக்கின்றது. அத்துடன், நலன்புரி மாநிலத்தில், சமூக ஒழுங்கின்மையானது (ஒழுங்கீனமானது) அரசில் தங்கியிருக்கும் நபர்களின் அதிகரிப்பினால் அரச நடவடிக்கைகள் அதிகளவு தற்துணிவுடன் உருவாக்கப்படுகிறது. செல்வம் தொடர்பான நிதிச் சீராக்கல்கள் விரைவாக மேற்கொள்ளப் படுகின்றபோது மரபுரீதியான லிபரல்வாதிகளினால் உருவாக்கப்பட்ட சட்ட ஆட்சிக்கு அதிகளவு சேதம் ஏற்படுகிறது.

**(தொடரும்)**

# முஸ்லிம் தலைவர்கள் மஹிந்தவை ஆதரிக்கவேண்டும்

## உடன்படிக்கையும் செய்து கொள்ளலாம் - ஏ.எச்.எம். அஸ்வர் கோரிக்கை

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

இந்த அரசு முஸ்லிம்களுக்கு புளித்துப் போய்விட்டது. அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை இதற்குச் சான்றாகவுள்ளது. இந்த நிலையில் முஸ்லிம் தலைவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோடு ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்வதன் மூலம் எதிர் காலத்தில் அவர் தலைமையிலான ஆட்சியின் கீழ் முஸ்லிம்களது பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொள்ளலாம் என முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி சார்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அதில் அவர் கூறியதாவது,

இந்த அரசாங்கதை ஆட்சிபீடத்துக்கு கொண்டு வந்த முஸ்லிம் தலைவர்களுக்கு இந்த அரசாங்கம் புளித்துப் போய்விட்டது. இந்தப் பழம் புளிக்கும் என்று வேறுபக்கம் திரும்ப ஆரம்பித்து விட்டார்கள். நவமணியின் நேற்றைய பிரதான செய்தியை சுட்டிக்காட்டிப் பேசிய அஸ்வர், நல்லாட்சி அரசாங்கம் மக்களை ஏமாற்றுகிறது என்று ஹிஸ்புல்லாஹ் அமைச்சரே வாய் திறந்து கூறக்கூடியளவுக்கு அரசாங்கம் முஸ்லிம்களைப் புறக்கணிக்கிறது. இந்த அரசாங்கத்திடம் வக்களாத்து வாங்கிய ஒரு முஸ்லிம் இப்போது இலத்திரனியல் ஊடகத்தில் சொல்கின்றார். சுமந்திரன் வரும் போது ஜனாதிபதி எழுந்து நிற்கின்றார். ஆனால் முஸ்லிம் தலைவர்களுக்கு இவர்கள் எந்த வித மரியாதையையும் இவர்கள் அளிப்பதில்லை என்று கூறுகின்றார். ஏன் குட்டக் குட்ட நாம் குனிய வேண்டும். இவர்களுக்கு அவமரியாதை ஏற்படுத்தக் கூடிய இரண்டு தலைவர்கள் இங்கு இருக்கின்றார்கள் என்று சொன்னால், அவர்களை விட்டு எதிர்காலத்தில் தன்மானத்தோடு முஸ்லிம் சமுதாயத்தை நடாத்தக் கூடிய ஒருவரை நாங்கள் தேர்ந்தெடுப்போம் அவர்தான் மஹிந்த ராஜபக்ஷ என்பதை கிழக்கு மாகாண முஸ்லிம்களும் ஏராளமான முஸ்லிம் தலைவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவை எளிமையாகச் சந்திக்கலாம். பேச்சுக்கள் பேசலாம். அவர் குற்றங்குறைகளை காது தாழ்த்தி கேட்கக் கூடியவர். அது மாத்திரமல்ல, உபசரிப்பதில் உச்ச கட்டத்தைத் தொட்டவர். எனவே அவரோடு அனைத்து முஸ்லிம் தலைவர்களும் ஓர் உடன்படிக்கை செய்து ஒன்றாக அவர் தலைமையின் கீழ் நாம் இயங்கினால் நாம் எதிர்காலத்தில் அவர் பதவிக்கு வந்த போது முஸ்லிம்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் எமக்கு ஒரு பெரும் சக்தியாக இருக்கும்.

எனவே ரவூப் ஹக்கீம், றிஷாத் பதியுதீன், அதாஉல்லாஹ், ஹிஸ்புல்லாஹ், பஷீர் சேகுதாவூத், சேகு இஸ்ஸதீன், சவாஹிர் சாலி, ஹஸன் அலி, நௌஸாத் மன்சூர், மஜீத் போன்றோர் ஒன்று சேர்ந்து நிதானமாகச் சிந்தித்து எதிர்காலத்தில் எமக்கு பாதுகாப்பை வழங்கக் கூடிய ஓர் அரணை எழுப்புவதற்கு மஹிந்த ராஜபக்ஷவோடு ஒரு புரிந்துணர்வுக்கு வருமாறு வாஞ்சையோடும் தோழமைப் பாசத்தோடும் அனைத்து முஸ்லிம் தலைமைகளிடத்திலும் நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். அது மாத்திரமல்ல, அவர் நேற்றுமுன்தினம் கிழக்கில் இருந்து வந்த முஸ்லிம்களைச் சந்தித்து அவர்களிடத்தில் பேசும் போது, ஒரு பெரும் அபாய சமிக்ஞையை விடுத்தார்.

அதாவது, தன்னை முஸ்லிம் சமூகத்திலிருந்து வேறுபடுத்துவத்துவதற்கு சர்வதேச சக்திகளைக் கொண்டு அன்று எப்படி வியூகம் அமைக்கப்பட்டதோ அதேமாதிரியாக மீண்டும் வெளிநாட்டு சக்திகளையும் ஏகாதிபத்தியவாதிகளையும் கொண்டு மீண்டும் என்னை முஸ்லிம்களிடமிருந்து பிரிப்பதற்காக வேண்டி ஒரு பெரும் சதித்திட்டம் தீட்டப்பட்டுக் கொண்டு வருகின்றது.



இதனையிட்டு முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை செய்து கொள்ள விரும்புகின்றேன்.

என்னுடைய காலத்தில் முஸ்லிம்களுக்கு எந்த கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை அநியாயாம் செய்யவுமில்லை என்பதை உறுதியாகச் சொல்லுகின்றேன். நான் செய்த பணிகளை ஒவ்வொன்றாக பட்டியல் போட்டுத் தெரிவிக்கலாம்.

அதாவது, அழகான நவீன நான்கு பள்ளிவாசல்களை அங்குரார்ப்பணம் செய்து வைத்திருக்கிறேன். ஹஜ்ஜுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமல் அனுப்புவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தேன். நீதிமன்றம் பாங்கு சொல்வதனை ஒலிபரப்பு மூலமாகத் தடை செய்த போது அதனை செய்யுங்கள் என்று தேசிய வானொலிக்கு உத்தரவு செய்ததும் நான்தான். அது இன்னும் நடைமுறையில் உள்ளது என்றும் முஸ்லிம்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் - என்றும் தெரிவித்தார்.

# கற்பாறைகள் விழுந்து இருவர் மரணம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

நுவரெலியா - வலப்பனை பிரதேசத்திற்குட்பட்ட தெரிபேஹ பகுதியில் கற்பாறைகள் சரிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தினை சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளதாக வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,நேற்று தந்தையும், மகனும் செங்குத்தாக காணப்பட்ட உயரமான மலைப்பகுதியில் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்காக துப்பரவு செய்து கொண்டியிருந்த போது மேலிருந்து பெரிய கற்பாறை சரிந்து விழுந்துள்ளது.இதன் போது இருவரும் கற்பறையில் சிக்கி பரிதாபமான நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 70 வயதுடைய டி.எம்.எச் சுதுபண்டார மற்றும் 36 வயதுடைய நிமால் திலகசிரி என அடையாளம் காணப்பட்டுள்ளனர். பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தெற்கில் முஸ்லிம் லீக் வாலிப சம்மேளனம்

முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் ஹம்பாந்தோட்டை மாவட்ட சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி மாலை 3 மணிக்கும் மாத்தறை மாவட்ட சம்மேளனக் கூட்டம் அன்று இரவு 7 மணிக்கும் நடைபெறும். தென் மாகணத்தில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் மாவட்ட சம்மேளனங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

சம்மேளனத்தின் தென் மாகாணப் பணிப்பாளர் நப்லி, ஹம்பாந்தோட்டை மாவட்ட அமைப்பாளர் இர்பான், மாத்தறை மாவட்ட அமைப்பாளர் அப்ராஸ் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொணடுள்ளார்கள்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி பீ.எம் பாரூக் பொதுச் செயலாளர் எம். அஜிவதீன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

# மெராயாவில் சூறாவளி எம்.பியின் வீடு உட்பட 33வீடுகள் சேதம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

மெராயா பகுதியில் நேற்று மாலையில் ஏற்பட்ட மினி சூறாவளியினால் 33 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் சுமார் 150க்கும் மேற்பட்டோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பாதிப்படைந்த வீடுகளில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் வீடும் அடங்குவதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சூறாவளி ஒல்ட்ரிம் தோட்டத்துக்கு சொந்தமான கௌலினா பிரிவும் மற்றும் என்போல்ட் தோட்டப்பகுதியிலும் ஏற்பட்டுள்ளது. இதில் கௌலினா தோட்டத்தில் 25 வீடுகளும், என்போல்ட் பகுதியில் 8 வீடுகளும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் சேதமடைந்துள்ளன.

மின்கம்பங்கள் மற்றும் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக இப்பிரதேசத்தில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளன.



பறகஹதெனிய ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹமத்மதிய்யாவினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிண்ணியா மாஞ்சோலை ஆலிம் விதியில் அமைந்துள்ள ஹுதாப் பள்ளிவாசல் திறப்பு விழா அண்மையில் அஸர் தொழுகையுடன் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட உலமாக்களான கலாநிதி அஷ்ஷெய்க் அம்ஜத் ராசிக் அஷ்ஷெய்க் எம்.சீ அன்சார் ரியாதி, அஷ்ஷெய்க் எஸ். எச். எம். இஸ்மாயில் ஆகியோர் உரையாற்றியதுடன் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் பள்ளியின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

(குருநாகல் இக்பால் அலி)

# கலப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிக்க மங்கள திட்டம்; அமைச்சுப் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும்

## சரத் வீரசேகர கோரிக்கை

கலப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறினாலும்கூட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதற்கு உடன்படுகின்றார்.நாட்டின் தலைவருக்கு எதிராகவும் படையினருக்கு எதிராகவும் செயற்படும் மங்களவை ஜானதிபதி அமைச்சுப் பதவியில் இருந்து உடன் நீக்க வேண்டும்.

-இவ்வாறு சிறிலங்கா சுத்தந்திர கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறுகையில்;

இந்த நாட்டின் நீதிமன்றம் என்பது எல்லோருக்கும் பொதுவானது.இராணுவம் குற்றம் செய்தாலும் அந்த நீதிமன்றத்தினூடாகத்தான் விசாரிக்கப்பட வேண்டும்.இந்த நிலையில்,அவர்கள் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி கலப்பு நீதிபதிகளைக் கொண்ட தனியான நீதிமன்றம் ஒன்றின் ஊடாக விசாரிக்க வேண்டும் என்று சர்வதேசம் விடுக்கும் கோரிக்கையை ஏற்க முடியாது.

கலப்பு நீதிமன்றத்தை ஜனாதிபதியும் நிராகரித்துள்ளார். பிரதமரும் நிராகரித்துள்ளார்.ஆனால்,வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அதை வரவேற்கின்றார்.இந்தக் கோரிக்கையை நிராகரிக்க முடியாது என்று கூறுகின்றார். அப்படியென்றால் கலப்பு நீதிமன்றம் அமைப்புக்கு அவர் துணை போகின்றார் என்பது தெளிவாகின்றது.

ஜனாதிபதி இங்கிருந்து சொல்கின்ற கருத்துக்களை விடவும் உலக நாடுகளின் தலைவர்களின் முன்னிலையில் ஐ.நா சபையில் இருந்து மங்கள கூறும் கருத்துத்தான் பலமானது. அதையே சர்வதேசம் இலங்கை அரசின் நிலைப்பாடாக எடுக்கும். நாட்டின் தலைவரின் நிலைப்பாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட ஒருவர்-படையினரைக் காட்டிக்கொடுப்பதற்கு திட்டமிடுகின்ற ஒருவர் வெளி விவகார அமைச்சராக இருப்பதற்குத் தகுதியற்றவர்.அவரது அமைச்சுப் பதவியை ஜனாதிபதி உடனடியாகப் பறிக்க வேண்டும். அப்போதுதான் ஜனாதிபதிக்கு முதுகெலும்பு இருக்கின்றது என நாம் நம்புவோம். என்றார்.


# ஆடு திருடியவனுக்கு விளக்கமறியல்

(திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் முற்சக்கர வண்டியில் ஆடொன்றினை திருட்டுத்தனமாக திருடிச்சென்ற சந்தேக நபரை இம்மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் திருகோணமலை நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் திருகோணமலை நிலாவெளி பகுதியைச்சேர்ந்த சல்மான் பாரூக் (27வயது) எனவும் தெரியவருகின்றது.

துறைமுக பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியிலுள்ள ஒருவரின் ஆட்டினை திருடி முற்சக்கர வண்டியில் கொண்டு செல்லும் போது பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119 எனும் இலக்கத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து மிகிந்தபுரம் பகுதியில் வைத்து முற்சக்கர



வண்டியை சோதனை செய்த போது திருட்டு தனமாக கொண்டு சென்ற ஆடும் கேரளா கஞ்சா 1 பக்கற்றும் கைப்பற்றப்பட்டதாகவும் நீதவான் முன்னிலையில் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஓட்டமாவடி இளைஞர் கழக நிர்வாகத்தெரிவு

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலில் செயற்படுகின்ற மேற்கு ஓட்டமாவடி வருடாந்த பிரதேச இளைஞர் கழக சம்மேளன நிர்வாகத் தெரிவுக் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இக்கூட்டம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி டபிள்யு.ஜீ.எஸ். எரந்திகவின் தலைமையிலும், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான உதவிப்பணிப்பாளர் ஆலீத்தீன் ஹமீரின் வழிகாட்டலில் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி பீ.எம். றியாத்தின் தலைமையிலும் இடம்பெறவுள்ளது. இதில் 2017ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர்,உப தலைவர், உப செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுக்கான அழைப்பிதழ் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை கிடைக்காதவர்கள் இந்த இலக்கங்களுடன் 0772242469 அல்லது 0755236363 தொடர்புகொள்ளவும்.

# எச்.ஐ.வி. தொற்றுக்கு 40 பேர் அடையாளம்

(மினுவாங்கொடை நிருபர்)

நாடளாவிய ரீதியில், எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 40 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இதில் அதிகமானோர் கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் இனங்காணப்பட்டுள்ளதாக, எச்.ஐ.வி. எயிட்ஸ் பாலியல் தொற்று ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல், பெப்ரவரி மாதம் வரையிலான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே, இவ்வாறானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

மிகப் பயங்கர ஆட்கொல்லி தொற்றான எச்.ஐ.வி.தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள வைத்தியர் இத் தொற்று தங்களுக்குள் உள்ளதா? என்பதை, குருதிப் பரிசோதனையின் மூலம் உறுதி செய்து கொள்ளுமாறும் மக்களிடம் கேட்டுள்ளார்.

கொழும்பு -10, சேரம் வீதியில் அமைந்துள்ள பாலியல் தொற்று நோய் சிகிச்சைப் பிரிவில், குருதிப் பரிசோதனைகளை இலவசமாக மேற்கொள்ள முடியும் என்றும், இதற்காக இப் பிரிவு, அரச விடுமுறை தவிர்ந்த கிழமை நாட்களில், காலை 8 மணி முதல், மாலை 4 மணி வரை திறந்திருக்கும் என்றும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

எக் காரணம் கொண்டும், இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது என்றும் வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தெவட்டகஹா பள்ளியில் நியூசிலாந்து போக்குவரத்து அமைச்சர்



(அஷ்ரப் ஏ சமத்)

நியூசிலாந்து நாட்டின் போக்குவரத்து, உணவு, குடிவரவு குடியகழ்வு, அமைச்சர் டேவிட் பெனிட் நேற்றுமுன்தினம் கொழும்பு -07 தெவட்டஹா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார்.

இலங்கையில் முதலிடுவதற்காக நியூசிலாந்து வர்த்தக தூதுக் குழுவுடன் இலங்கை வந்துள்ள அமைச்சர் இலங்கையில் பல்வேறு துறைகளில் முதலிடுவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் வர்த்தகப் பிரநிதிகளும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு தெவட்டகஹா பள்ளிவாசலின் நிர்வாக சபைத் தலைவர் றியாஸ் சாலி, நியூசிலாந்து அமைச்சரை பொன்னாடை போற்றி கௌரவித்தார். இந் நிகழ்வில் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் முக்தார் மரிக்கார், மற்றும் இலங்கையின் நியூலாந்து நாட்டிற்கான கவுன்சிலர் சேனக்க சில்வாவும் கலந்துகொண்டனர்.

# மு.கா. எதிர் கூட்டணியின் சாத்தியப்பாடுகள்

★ இப்னு ஜப்பார்

மரச்சின்னம் முஸ்லிம் காங்கிரஸின் அடையாளமாக இருப்பதனால் என்னவோ, அதில் கிளைகளாக இருந்த பலர் அதைக் கத்தரித்து, பதியமிட்டு புதிய சிறுசிறு கன்றுகளாக அங்குமிங்கும் வளர்ந்து கிடக்கின்றனர்.



கட்சியின் மறைந்த ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் தலைவராக இருக்கும் நேரத்தில், கட்சியுடன் முரண்பட்ட பலரை சட்டைக் கொலரில் பிடித்த வெளியில் போட்டிருக்கிறார். ஆனால், ரவூப் ஹக்கீம் தலைமையிலான கட்சியில் பலர், கோபித்துக்கொண்டுதான் வெளியே போயிருக்கின்றனர். முன்னாள் தவிசாளர் பசீர் சேகுதாவூத் தூக்கியெறியப்படவில்லை. இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பது வேறுகதை. ஹஸன் அலியும் தூக்கியெறியப்படவில்லை. அவர் கட்சியுடன் கோபித்துக்கொண்டிருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை, உள்வீட்டுச் சண்டை பிடிப்பவர்கள் அதற்கு தாராளமாக இருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை. அந்தளவு அவர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதன் மூலம், ரவூப் ஹக்கீம் மென்மைத்தன்மை உடையவராக இன்றும் அடையாளப்படுத்தப்படுகிறார். இதுகுறித்து, நிந்தவூரில் நடைபெற்ற இருவேறு கூட்டங்களில் ரவூப் ஹக்கீம் கூறும்போது, 'சாது மிரண்டால்', 'நான் பிரம்பு எடுத்தால் கட்சியில் யாரும் இருக்கமாட்டார்கள்' என்ற வார்த்தைப் பிரயோகங்களை கையாண்டார். எதற்கும் ஒரு எல்லையுண்டு என்பதையே அந்த வார்த்தைகள் மூலம் அவர் சொல்ல விளைந்திருக்கிறார்.

தலைமை என்பவர் செவிடனாகவும், குருடனாகவும் இருக்கவேண்டும் என்று அஷ்ரப் கூறிய நிபந்தனையை ஹக்கீம் சில இடங்களில் மீறியிருக்கிறார். கட்சியை குழப்பும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது சிலர்மீது கடிந்துகொள்ளும் வழக்கம் அவருக்கு இருக்கிறது. இதனால், உயர்பீடத்தில் இருப்பவர்களே எதிரிகளாக சித்தரிக்கப்படுகின்ற சம்பவங்களும் நடந்துள்ளன. இந்த எதிர்ப்புகளுக்குப் பின்னால் அவரவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் இருப்பதையும் மறுப்பதிற்கில்லை.

ஒரு வண்டியை இரண்டு மாடுகள் சேர்ந்திழுப்பது போன்றே ரவூப் ஹக்கீமும், ஹஸன் அலியும் கட்சியை வழிநடாத்திக்கொண்டிருந்தனர். இதன்போது, காலப்போக்கில் இருவரின் கருத்துகளும் அடிக்கடி முரண்படத் தொடங்கின. ஒரு மாடு தண்ணிக்கு இழுத்தால் இன்னுமொரு தவிட்டுக்கு இழுக்கின்ற கதையாகத்தான் தலைவர் பதவியும், செயலாளர் பதவியும் காணப்பட்டன. ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கும்போதுகூட, ஒருவர் சொல்லும் விடயம் இன்னொருவருக்கு தெரியாத நிலையில் பிறழ்வு நிலையே காணப்பட்டது.

தலைவரினதும், செயலாளரினதும் பயணிப்புகளும் வெவ்வேறு திசைகளில் இருப்பது கட்சிக்கு ஆரோக்கியமானதல்ல. இதனாலேயே ஒரே பாதையில் பயணிக்கின்ற ஒரு செயலாளரின் தேவை உணரப்பட்டது. இதனாலேயே, கண்டி பேராளர் மாநாட்டில் வைத்து மன்சூர் ஏ. காதர் உயர்பீட செயலாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். இருந்தாலும், ஹஸன் அலி அதிகாரங்கள் குறைக்கப்பட்ட செயலாளராக இருந்துவந்தார்.

தற்போது செயலாளரை நியமிக்கும் அதிகாரம் தற்போது தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த செயலாளர் தலையாட்டி பொம்மையாக இருந்தால் அவரை நீக்கும் அதிகாரம் கட்சியின் உயர்பீடத்துக்கு இருக்கிறது. இந்த நடைமுறைதான் ஐக்கிய தேசியக் கட்சியிலும் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஹஸன் அலிக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்குவதற்கு ஹக்கீம் இணக்கம் தெரிவித்திருந்த நிலையில், அதிகாரமுள்ள செயலாளர் பதவியும், தேசியப்பட்டியலும் வேண்டும் என்று கேட்டிருந்தார். ஆனால், செயலாளர் பதவியை கொடுக்க விரும்பாத ரவூப் ஹக்கீம், தேசியப்பட்டியலை வழங்குவதற்கு தயாராகவே இருந்தார், இருக்கிறார். இதுகுறித்து ஹஸன் அலியுடன் கட்சி சார்பாக பலர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். தேசியப்பட்டியலை மட்டும் ஏற்க விரும்பிய ஹஸன் அலி, பின்னர் அதனை மறுத்திருந்தார். இதன்மூலம் அவரின் பின்னால் ஏதோவொரு சக்தி இருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

ஹஸன் அலியின் செயலாளர் பதவி வறிதாக்கப்பட்ட பின்னர், அவரது மகன் உள்ளடங்கிய குழுவினர் 'கிழக்கின் எழுச்சி' என்ற கோசத்தை முன்னெடுத்து வந்தனர். முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் கிழக்கு மாகாணத்தில் இருக்க வேண்டும் என்ற கோசத்துடன் கிளம்பிய கிழக்கின் எழுச்சி, ஹஸன் அலி கட்சியுடன் மீண்டும் இணைந்து செயற்படத் தொடங்கியபோது, அடக்கி வாசிக்கத் தொடங்கியது.

புத்தளம் முன்னாள் நகரபிதா கே.ஏ. பாயிஸ் புத்தளத்தில் திறந்துவைத்த கட்சிக் காரியாலயத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஹஸன் அலி, புத்தளம் நுஹ்மான் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடலில் பழைய மனஸ்தாபங்களை மறந்து, கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளதாக உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் கடைசியாக நடைபெற்ற கட்டாய உச்சபீடக் கூட்டத்தின்போது, கட்சியின் செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்படவேண்டும், அவருக்கு தேசியப்பட்டியல் நியமனமும் வழங்கப்படவேண்டும் அத்துடன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியும் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை ஹஸன் அலி முன்வைத்தார். இதை தனக்குத்தான் வழங்கவேண்டும் என்பதை அவர் சூசுகமாக தெரிவித்திருந்தார்.

ஆனால், தேசியப்பட்டியலை மட்டுமே வழங்குவதற்கு மாத்திரமே ஹக்கீம் இணக்கம் தெரிவித்திருந்தார். இந்நிலையில், செயலாளர் பதவிக்கு பதிலாக தவிசாளர் பதவியை பெற்றுக்கொள்ளுமாறு ஹக்கீம் கோரிக்கை விடுத்தும் ஹஸன் அலி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஹஸன் அலி வருவார் என்ற நம்பிக்கையில் அட்டாளைச்சேனைக்கு தேசியப்பட்டியலை வழங்காமல் ரவூப் ஹக்கீம் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் கட்சிக்குள் இருந்த பஷீரால் இயக்கப்படுபவர்கள் என்று கூறப்படும் சிலரின் அனுசரணையுடன் ஹஸன் அலி, தலைவரால் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து உரையாற்றினார். கடைசியாக ரவூப் ஹக்கீம்தான் தலைவர் என்றும் அவரை திருத்துவதற்காகவே அன்றி, மாற்றுவதற்காக இந்தக் கூட்டம் நடாத்தப்படவில்லை என்று ஹஸன் அலி கூறியதும் ஏற்பாட்டாளர்கள், கட்சி இரண்டாக பிளவுபடும் என்று மேடை முன்னால் குழுமியிருந்த மு.கா. அதிருப்தியாளர்கள், மாற்றுக்கட்சிக்காரர்கள் என அனைவருமே மூக்கடைபட்டு போனார்கள்.

நிந்தவூர் முன்னாள் தவிசாளர் தாஹிர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தை அட்டாளைச்சேனை முன்னாள் தவிசாளர் அன்சில் ஏற்பாடு செய்திருந்தார். பாலமுனை தேசிய மாநாட்டுக்கு பயன்படுத்தப்பட்ட கட்சியின் மேடை மற்றும் கொடிகளை இந்தக் கூட்டத்துக்கு அன்சில் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. ஹஸன் அலிக்கு தேசியப்பட்டியல் கொடுக்கக்கூடாது என்று தலைவரிடம் கூறியவர்களே, இன்று அவருக்காக குரல்கொடுக்கும் கூட்டங்களில் கலந்துகொள்வதானது நகைப்புக்குரிய விடயம்.

மறுநாள் ஹஸன் அலி சகோதரர் ஜப்பார் அலி அதே நிந்தவூரில் ஹக்கீமை அழைத்து ஒரு கூட்டத்தை நடாத்தியிருந்தார். 'ஹஸன் அலி மனவேதனையுடன் இருக்கிறார். அவர் கூட்டம் நடத்துவதை ஆமோதிக்கிறேன். ஆனால், சிலர் அவரை பகடையாக வைத்து சித்து விளையாட்டுக் காட்டுவதை அனுமதிக்க முடியாது என்று ரவூப் ஹக்கீம் இந்தக் கூட்டத்தில் பேசியிருந்தார்.

ஹஸன் அலி மற்றும் ரவூப் ஹக்கீம் இருவரின் கூற்றையும் வைத்துப் பார்க்கும்போது, இருவரும் மோதிக்கொள்ளவில்லை என்பது தெளிவாக விங்குகின்றது. ஆனால், இதன் பின்னணியில் சில மு.கா. அதிருப்தியாளர்கள் இருப்பதை சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. ஹஸன் அலியின் கூட்டத்தை மு.கா. அதிருப்தியாளர்கள் கொண்டாடினார்களோ இல்லையோ, மாற்றுக்கட்சிக்காரர்கள் தலையில் வைத்துக் கொண்டாடினர்.

ரவூப் ஹக்கீமை பொறுத்தவரை, அவர் ஹஸன் அலியை இன்னும் உயர்வாகவே மதிக்கிறார் என்பது அவரது செயற்பாடுகளிலிருந்து விளங்குகின்றது. நடப்பாண்டுக்கான உயர்பீட உறுப்பினர்களின் பெயர்களை அறிவித்த அவர், அதை முழுமையாக அறிவிக்காமல் இன்னும் சிலருக்கு இடங்களை வைத்துக்கொண்டிருக்கிறார். அதில் ஹஸன் அலியின் பெயரும் இருப்பதாக ஒரு தகவல். ஹஸன் அலி வெறுமனே உயர்பீட உறுப்பினராக வருவதை விரும்பாமல், தவிசாளர் பதவியை கொடுத்து அவரை அலங்கரித்து வைப்பதற்காக காத்திருக்கிறார். பஷீருக்கு மூடப்பட்டிருக்கும் கதவு ஹஸன் அலிக்காக திறந்திருக்கிறது.

கட்சியினால் இடைநிறுத்தப்பட்டுள்ள பஷீர் சேகுதாவூத் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக ஒரு கூட்டணியை அமைப்பதற்கு அழைப்பு விடுத்துவருகிறார். திரைமறைவில் ஏனைய முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுடனும் இதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில், பஷீர் சேகுதாவூத் ஹஸன் அலியின் நிந்தவூர் மேடையில் ஏறுவார் என்று பலர் காத்திருந்தாலும் அது நடைபெறவில்லை. அப்படி நடந்திருந்தால், இருவரும் தேசியப்பட்டியல் கிடைக்காத காரணத்தினால்தான் கட்சிக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள் என்பதை அவர்களாக வாக்குமூலம் கொடுப்பதாக அது அமைந்துவிடும்.

ஆனாலும், பஷீர் சேகுதாவூதின் தூதுவர்கள் நிந்தவூர் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். பஷீரும் ஹஸன் அலியும் பொதுவெளியில் ஒன்றுசேர்ந்தால் அவர்களது போராட்டத்தை அவர்களாகவே மலினப்படுத்துவதாக அமைந்துவிடும். அதை இவர்கள் இப்போதைக்கு செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கவும் முடியாது. ஹஸன் அலி தனக்குரியது கிடைத்தால் ஒதுங்கிவிடும் நிலையில் இருக்கிறார். ஆனால், பஷீர் பழிவாங்கும் படலத்தில் இருக்கிறார். இந்நிலையில் இருவரும் கூட்டிணைவது என்பதும் இன்னும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

கூட்டு எதிர்க்கட்சி மூலம் பஷீர் சாதிக்க நினைக்கும் விடயங்கள் யாருக்கும் தெரியாமலில்லை. தனக்கென ஒரு வாக்கு வங்கியை வைத்திருக்காத பஷீர், மு.கா. மூலம் தனக்கு கிடைக்காத ஒரு அரசியல் அந்தஸ்தையே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்.

பிரதிநிதித்துவ அரசியலில் ஈடுபடுவதில்லை என்று அறிவித்தவர் எப்படி மீண்டும் அரசியலுக்குள் வருவார் என்று நீங்கள் கேட்கலாம். மு.கா. மூலம் தனக்கு தேசியப்பட்டியல் கிடைக்காது என்று நன்கறிந்த பின்னர்தான், பஷீர் அந்த அறிவிப்பைச் செய்திருந்தார்.

2011ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற மு.கா. பேராளர் மாநாட்டில் வைத்து பஷீர், தான் இனிமேல் பிரதிநிதித்துவ அரசியலில் ஈடுபடப்போவதில்லை என்று அறிவித்திருந்தார். இப்படி அறிவிப்புச் செய்தவர்தான், பின்கதவால் சென்று முழு அமைச்சுப் பதவியைப் பெற்று அனுபவித்துவிட்டு, தற்போது தேசியப்பட்டியல் கேட்டும் கிடைக்காத காரணத்தினால்தான் மீண்டும் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார் என்பது தெளிவாகவே விளங்குகிறது. ஆகவே, அவர் மீண்டும் பிரதிநிதித்துவ அரசியலில் ஈடுபடமாட்டார் என்று சொல்லமுடியாது.

கட்சியை தூய்மைப்படுத்தப்போகிறோம் என்று வெளிக்கிளம்பியிருக்கும் அணி, கட்சியை அழித்துவிட்டு தலைமையை கைப்பற்றும் நோக்கில்தான் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. தலைவராக ரவூப் ஹக்கீமை உச்சபீடக் கூட்டத்தின்போது பிரேரித்த ஹஸன் அலி, நிந்தவூர் கூட்டத்தில்வைத்து அதனை ஆமோதித்தும் இருக்கிறார். மு.கா. அதிருப்தியாளர்களில் மிக முக்கியமான ஹஸன் அலியே, அடுத்த தலைமைக்கு யாரும் தகுதியில்லை என்பதை தெளிவாக உணர்த்தியுள்ளார். இந்நிலையில் யாரை தலைவராக கொண்டுவருவதற்கு இவர்கள் வேலைசெய்கிறார்கள் என்பது குறித்து அவர்களுக்குள்ளேயே ஒரு தெளிவு இல்லை.

முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையான கிழக்கு மாகாணத்தில் அக்கட்சி தோற்கடிக்கப்படுமாயின் அது ஓர் உரிமைக் குரலின் அழிப்பாகவே பார்க்கப்படும். அஷ்ரப் எவ்வளவோ கஷ்டப்பட்டு, உயிரைத் தியாகம் செய்து வளர்த்த ஒரு கட்சியை தனிமனித நலன்களுக்காக அழிப்பதற்கு புறப்பட்டிருக்கும் கூட்டம் கட்சியின் தியாகம் பற்றி சிந்திக்கவேண்டும். ஹக்கீமைத் தவிர வேறொருவர் முஸ்லிம் காங்கிரஸை பொறுப்பெடுத்திருந்தால், கட்சியை இந்தளவுக்கு வழிநடாத்தி வந்திருப்பார் என்று நான் நம்பவில்லை.

முஸ்லிம் காங்கிரஸை கிழக்கு மாகாணத்தில் தோற்கடிக்க வைக்கவேண்டும் என்பதுததான் பஷீரின் இலக்கு என்பது அவரது செயற்பாடுகளில் தெளிவாகத் தெரிகிறது. அதற்கான காரியங்களையே அவர் திரைமறைவில் செய்துகொண்டிருக்கிறார். அவர் வெளியிடப்போவதாக கூறும் ஆதாரங்களையும் அடக்கிவாசிப்பதாக பேசப்படுகிறது. மு.கா. அதிருப்தியாளர்களும் கட்சியை தோற்கடிக்கும் நிலைப்பாட்டினைத்தான் கொண்டிருக்கிறார்கள். கட்சியை தோற்கடித்து தலைமைத்துவத்தை அகற்றவேண்டும் என்பதுதான் இவர்களது இலக்கு.

கிழக்கில் மு.கா. தோற்கடிக்கப்படுமானால், அமெரிக்காவில் ட்ரம்ப் எப்படி அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டாரோ அது போன்றதொரு நிலைமைதான் கிழக்கிலும் ஏற்படும். முஸ்லிம்களின் பிரச்சினைகளை யார் கையாள்வது என்பது விடைகாண முடியாத கேள்வியாகவே நீடிக்கும். தங்களுக்குள் ஒரு தெளிவு இல்லாதவர்களால் எப்படி ஒரு சமூகத்துக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

கட்சிக்கு புதிய ஒருவரை தலைவராக நியமிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டால் அவர் ஏதோ ஒரு வகையில் மாற்றுக் கட்சியுடன் அல்லது அரசாங்கத்துடன் திரைமறைவில் இரகசிய பேச்சுவார்த்தை நடத்திய ஒருவராகத்தான் இருப்பார். கட்சிக்காக பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்காத ஒருவரை தலைவராக கொண்டுவாருங்கள் என்று சொன்னால், அவர்கள் போராட்டத்தை விட்டுவிட்டு ஓட்டம்பிடித்துவிடுவார்கள்.

கட்சியைக் குழப்பவேண்டும், அதிகாரத்தை கைப்பற்றவேண்டும், மாநாடு நடைபெறுவதை நிறுத்தவேண்டும் என்று அடிக்கடி இரகசிய கூட்டங்களை நடத்தியவர்கள்தான் இந்தப் போராட்டங்களின் பின்னால் இருக்கிறார்கள் என்பது கட்சியின் போராளிகளுக்கு தெரியாமலும் இல்லை. தனிமனித நலன்களுக்காக கட்சியை அழிப்பதற்கு புறப்பட்டிருக்கும் இந்தக் கூட்டத்துக்கு போராளிகள் எந்தளவுக்கு இடம்கொடுப்பார்கள் என்பதையும் சிந்திக்கவேண்டும். ஏனென்றால், மாற்றுக் கட்சிக்காரர்கள் பணம் கொடுத்தும் செய்யமுடியாத வேலைகளை, தொண்டர் அடிப்படையில் தானாக வந்து செய்கின்ற போராளிகள் இருப்பதுதான் முஸ்லிம் காங்கிரஸின் சிறப்பியல்பு.

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

## அதியுயர் ஊடக விருதுகள் 2016

**சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 18 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்வு**

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வு செய்தியாளர்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது

சுயாதீனமான நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.



இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும்
இல: 96, பேனார்ட் சொய்சா மாவத்தை
(கிருல வீதி) கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில்
இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்
அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாக
பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 07, 2017**

அரபாத் வீதிப் பலகை நீக்கம்:

# யூதர்களை கொன்றவரின் பெயரை சூட்டக்கூடாது



- பிரதமர் பெஞ்சமின்

இஸ்ரேலின் அரபு நகர வீதியொன்றுக்கு முன்னாள் பலஸ்தீன தலைவர் யாஸிர் அரபாத்தின் பெயர் சூட்டப்பட்டதற்கு இஸ்ரேல் பிரதமர் எதிர்ப்பு வெளியிட்டதால் அந்த பெயர்ப் பலகை அகற்றப் பட்டுள்ளது. வடக்கு இஸ்ரேலின் ஜாத் கிராமத்திலுள்ள பெயர் பலகை அகற்றப் பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்பட்டுள்ளது.

''இஸ்ரேலியர் மற்றும் யூதர்களை கொன் றவரின் பெயர் இஸ்ரேல் வீதிக்கு சூட்டக் கூடாது'' என்று பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு கடந்த சனிக்கிழமை தெரிவித் திருந்தார்.

யாஸிர் அரபாத்தை பலஸ்தீனர்கள் விடுதலைப் போராளியாக பார்த்தபோதும் பெரும்பாலான இஸ்ரேலியர்கள் அவரை ஒரு தீவிரவாதியாகவே கருதி வருகின் றனர். இந்த பெயர் பலகை கடந்த 9 ஆண்டுகளாக இருந்து வருவதாக ஜொட் கவுன்ஸிலைச் சேர்ந்த முஹமது வதாத் இஸ்ரேலிய தொலைக்காட்சியொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய மக்கள் தொகையில் சுமார் 20 சதவீதமாகவுள்ள அரபியர் தம்மை அரசியல் மற்றும் கலாசார அடிப்படையில் பலஸ்தீனர்களாகவே கருதி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விக்கிலீக்ஸின் லீக்ஸ்:

# உலக மக்களை உன்னிப்பாக உளவு பார்க்கிறது சி.ஐ.ஏ.




## அமெ. வின் இரகசிய தொழில்நுட்பம் அம்பலம்

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. பயன்படுத்தக்கூடிய ஹேக்கிங் தொழில் நுட்பத்தை புலனாய்வு அமைப்பான விக்கிலீக்ஸ் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச நாடுகளின் அதி பயங்கர இரகசியங்களை அவ்வப்போது அம்பலப்படுத்தும் விக்கிலீக்ஸ் என்றைக்குமே அமெரிக்காவுக்கு தலைவலி தான். அமெரிக்க இராணுவ இரகசியங்கள் மற்றும் அணு சோதனைகள் குறித்த தகவல்களை வெளியிட்டதாக கூறி விக்கிலீக்ஸ் தலைவர் ஜூலியன் அசாஞ்சே-வை தேடப்படும் குற் றவாளியாக அமெரிக்கா அறிவித்தது. தற் போது ஈக்குவேடாரில் தஞ்சம் புகுந்துள்ள அசாஞ்சே அங்கிருந்தும் தனது வேலையை காட்டி வருகிறார்.




இந்நிலையில், 'வொல்ட்' 7 என்ற பெய ரில் அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ பற்றிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. சி.ஐ.ஏ பற்றிய இர கசிய ஆவணங்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் லீக்காவது இதுதான் முதல் முறை என்கிறது விக்கி லீக்ஸ். சி.ஐ.ஏ.யின் இரகசிய ஹேக்கிங் திட்டத்தைப் பற்றிய 8,761 ஆவணங்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஆவணங்களில் ஆப் பிள் ஐபோன், கூகுளின் எண்ட் ரோய்ட், சாம்சங் டிவிக்கள், விண்டோஸ் போன் போன்றவற்றை ஹேக் செய்து இர கசிய மைக்ரோபோனாக பயன்படுத்தும் அளவுக்கு சி.ஐ.ஏ. திட்டமிட்டிருந்தது விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொழில் நுட்பங்களை அமெரிக்க பொறியாளர்களே வடிவமைத்து கொடுக்கின்றனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர் தப்பினார் சவூதி மன்னர்

# படுகொலை முயற்சி முறியடிப்பு; 4 ஷிஆக்கள் மடக்கிப்பிடிப்பு

மலேசிய அரசு அதிரடி



சவூதி மன்னர் சமீபத்தில் மலேசியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தவேளை, அவரை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முறியடித்துவிட்டதாக அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சவூதி மன்னர் மலேசியாவிற்கு வருவதற்கு ஒரு மாதம் முன்பு தன்னுடைய படையினர் யெமனிலிருந்து வந்த ஹூதி கிளர்ச்சியாளர்கள் என சந்தேகிக்கப்படும் 4 பேர் உட்பட ஏழு பேரை கைது செய் துள்ளதாக மலேசிய காவல்துறை தலைவர் ஹாலித் அபு பக்கர் தெரிவித்தார்.

சுமார் இரு ஆண்டுகளாக தற்போது வரை யெமனிலுள்ள ஹூதி கிளர்ச்சியாளர்களை எதிர்த்து சவூதி தலைமையிலான கூட்டணிப்படைகள் எதிர்த்து போரிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

# ஈரான் போராளிகள் 2,100 பேர் ஈராக் - சிரியாவில் உயிரிழப்பு



ஈரானைச் சேர்ந்த 2,100 போராளிகள் ஈராக்கிலும் சிரியாவிலும் உயிரிழந்துள்ள னர் என்று ஈரான் தெரிவித்தது.

சிரியா மற்றும் ஈராக்கில் ஷியா பிரிவின ரின் புனிதமான மற்றும் பழைமையான தலங்களைப் பாதுகாக்க ஏராளமான வீரர் களை ஈரான் அனுப்பி வருகிறது.

ஷியா பிரிவினரின் புனித இடங்களைப் பாதுகாப்பதுடன் ஐ.எஸ். பயங்கரவாதிக ளுக்கு எதிரானபோரிலும் ஈரான் அனுப்பும் வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தவிர, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தா னிலிருந்து செல்லும் போராளிகளையும் ஈரான் கட்டுப்படுத்துவதாகக் கூறப்படுகி றது. சிரிய ஜனாதிபதி அஸாதுக்கு ஆத ரவாக போரிடவும் வீரர்களை அனுப்பி வருகிறது ஈரான்.

# மடகஸ்காரை தாக்கிய 'எனாவோ': 3 பேர் பலி; 7 இலட்சம் பேர் தவிப்பு



மடகஸ்காரில் ஏற்பட்ட கடும் புயலால் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயம டைந்துள்ளனர். அத்துடன் சுமார் 7 இலட் சம் பேர் பரிதவிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மடகஸ்காரில் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் கடும் வறட்சியும் அதைத் தொடர்ந்து உணவு தட்டுப்பாடும் நிலவுகிறது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு எனாவோ என்று பெயரிடப்பட்ட புயல் தாக்கியது. முன்னதாக இப்புயல் மடகாஸ்க ரின் வடகிழக்கிலுள்ள அன்டாலாகா பகுதி யில் கரையை கடந்தது. அப்போது மணிக்கு 290 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியது. இதனால் மழையும் அதனால் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது.

பலத்த காற்று வீசியதால் மரங்கள் வேரோடு சாய்ந்தன. மரோன்ட் செட்ரா மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. அதில் வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன.

தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து வந்தனர். மூடிக்கிடந்த மண்ணை அகற்றிப் பலரை மீட்டனர். இருந்தும் 2 குழந்தைகள் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ள னர். மேலும் 6 பேர் காயம் அடைந்தனர். நிலச்சரிவில் இப்பகுதியில் உள்ள 4 பாடசா லைகள் இடிந்து சேதமடைந்தன.

புயல் மழை காரணமாக அன்டாலாகா மற்றும் கேப் மசோயலா பகுதிகளில் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்புயலுக்கு 7 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

செஞ்சிலுவை சங்கம் சார்பில் 500 தன் னார்வு தொண்டு ஊழியர்கள் மீட்பு பணி யில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## உலகச் செய்திகள்

அமெரிக்காவுக்குள் நுழைய

# 6 நாட்டினருக்கு 90 நாட்கள் தடை

6 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய 90 நாட்கள் தடை விதிக்கப் பட்டுள்ளது. புதிய உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கையெழுத்திட்டார்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கடந்த ஜனவரி 27ஆந் திகதி, சிரிய அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைய காலவரையற்ற தடை விதித்தும், ஈராக் உட்பட 6 நாடுகளை சேர்ந்தவர்களுக்கு 90 நாட்கள் தடை விதித்தும் ஒரு உத்தரவில் கையெழுத் திட்டார். ஆனால், அந்த உத்தரவுக்கு சியாட்டிலுள்ள நீ திமன்றம் தடை விதித்து விட் டது.

இதையடுத்து, புதிய உத்தரவொன்றில் டிரம்ப் கையெழுத்திட்டார்.

அதில், சூடான், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா மற்றும் யெமன் ஆகிய 6 நாடுகளைச் சேர்ந் தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய 90 நாட்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளைச் சேர்ந் தவர்கள் ஏற்கனவே உரிய விசா பெற்று இருந்தால், அமெரிக்காவுக்கு வரத் தடை இல்லை.

கடந்த ஜனவரி 27ஆம் திகதி, தடைப் பட்டியலில் இடம்பெற்று இருந்த ஈராக், இந்த புதிய உத்தரவில் இடம்பெறாதது குறிப்பிடத் தக்கது.

மேலும், அகதிகளை அனுமதிக்கும் பணி, 120 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படும் என்றும் புதிய உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# வட கொரியாவின் ஏவுகணை சோதனை ஐ.நா. பாதுகாப்பு சபையில் கண்டனம்



உலக நாடுகளின் தடையைப் புறக்க ணித்து தொடர்ந்து ஆபத்தான ஏவுகணை களை பரிசோதித்து வரும் வட கொரியா வுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் தடை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கண்டனத்துக்குள்ளாகி வரும் வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன், அணு ஆயுதங்களையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் நவீனரக ஏவுகணைக ளையும் அவ்வப்போது தொடர்ந்து பரிசோ தித்து வருகிறார்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கி ழமை மீண்டும் நான்கு ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்தது. அடுத்தடுத்து விண்ணை நோக்கி சீறிப்பாய்ந்த இந்த ஏவு கணைகளில் மூன்று ஜப்பானின் கிழக்கு கடல் பகுதியில் வீழ்ந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் ஆற்றல் கொண்ட இந்த ஏவுகணைகள் 260 கி.மீ. உயரத்தில் பறந்து சென்று திட்ட மிட்ட இலக்கை தாக்கியதாக செய்திகள் வெளியாகின.

ஜப்பானிலுள்ள அமெரிக்க இராணுவ தளத்தை தாக்கும் நோக்கத்தில் அதற்கான ஒத்திகையாகவே இந்த ஏவுகணை பரிசோ தனை நடத்தப்பட்டதாக வட கொரியா தெரிவித்திருந்தது.

இதைப் போன்ற ஆத்திரமூட்டும் செயற் பாடுகளை வட கொரியா கைவிட வேண் டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியோ கட்டரெஸ் குறிப்பிட்டிருந்தார்.

வட கொரியாவின் இந்த பேரழிவுப் பாதையை இந்த உலகம் அனுமதிக்காது என ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதரும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜப்பானில் உள்ள அமெ ரிக்க இராணுவ தளத்தின்மீது தாக்குதல் நடத்தப் போவதாக வட கொரியா மிரட் டியுள்ள நிலையில் இந்த நெருக்கடியை சமாளிக்கவும் வட கொரியா மீது மேலும் புதிய தடைகளை விதிக்கவும் வட கொரி யாவின் தொடரும் அத்துமீறல் தொடர்பாக விவாதிக்கவும், அந்நாட்டுக்கு எதிராக மேலும் சில புதிய தடைகள் விதிப்பது தொடர்பாக ஆலோசிக்கவும் ஐ.நா. பாது காப்பு சபை நேற்று அவசரமாகக் கூடியது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் வட கொரியாவுக்கு எதி ராக அமெரிக்க அரசு தயாரித்த அறிக்கையை பாதுகாப்பு சபையில் உறுப்பினர்களாக இருக்கும் அனைத்து நாடுகளும் ஒருமன தாக ஆதரித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் முந்தைய தீர்மானங்களுக்கு எதிராகவும், தொடர்ந்து பெருமளவிலான அத்துமீறலாகவும் ஏவு கணை தொழில்நுட்பத்தை மேம்படுத் திவரும் வட கொரியாவுக்கு எதிராக தேவை யான நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜப்பானிலுள்ள அமெரிக்க இராணுவ தளத்தை தாக்கி அழிப்போம் என அறிவித் துள்ளதன் மூலமாக பிராந்தியத்தில் பதற் றத்தையும் ஆயுதப் போட்டியையும் வட கொரியா அதிகரிக்கச் செய்துள்ளதாகவும் இதுதொடர்பாக ஆலோசிப்பதற்காக பாது காப்பு சபையின் அவசர கூட்டம் நேற்று மீண்டும் கூடியது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகல்:

# பிரித்தானிய பாராளுமன்றத்தில் 2ஆவது முறை மசோதா தோல்வி



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியே றுவது குறித்த மசோதா பிரித்தானிய பாரா ளுமன்றத்தில் 2ஆவது முறையும் தோல்வி யடைந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கி லாந்து விலகுவது குறித்த பொது வாக் கெடுப்பு கடந்தாண்டு நடந்தது. அதில் 52 சதவீதம் பேர் வெளியேற வேண்டும் என வாக்களித்தனர்.

இதனால் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதாக பிரித்தானியா அறிவித்தது. இந்த தீர்மானத்துக்கு எதிராக இருந்த முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் பதவி விலகினார். புதிய பிரதமராக தெரேசா மே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கிடையே ஐரோப்பிய ஒன்றியத் திலிருந்து விலகுவதற்கு ஒப்புதல் பெறு வதற்கான சட்ட மசோதா பிரித்தானிய பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபையில் கடந்த முதலாம் திகதி கொண்டு வரப்பட் டது. இதை பிரதமர் தெரேசா மே தாக்கல் செய்தார்.

ஆனால் இந்த மசோதா தோல்வியடைந் தது. அதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் 2ஆவது தடவையாக இம்மசோதா பாராளு மன்ற பிரபுக்கள் சபையில் தாக்கல் செய்யப் பட்டது. அதைத் தொடர்ந்து பாராளுமன் றத்தில் மசோதா மீது 3 மணி நேர விவாதம் நடந்தது. இறுதியில் அதுவும் வாக்கெடுப் பில் தோல்வியடைந்தது. இது பிரதமர் தெரேசா மே அரசுக்கு சிக்கலை ஏற்படுத்தி யுள்ளது.

# ஆப்கானில் அமெரிக்க தூதரகம் அருகே குண்டு வெடிப்பு: மூவர் பலி; பலர் படுகாயம்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க தூதரகம் அருகே குண்டு வெடித் தது. அதை தொடர்ந்து தீவிரவாதி களுடன் இராணுவத்தினர் துப் பாக்கிச் சூட்டில் ஈடுபட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள அமெரிக்க தூதரகம் அருகே இராணுவ ஆஸ்பத்திரியும் இயங்கி வருகிறது. அங்கு பலத்த இராணுவ பாதுகாப்பும் போடப் பட்டுள்ளது.

இந்நிலையில் இராணுவ ஆஸ்பத்திரியில் நேற்று காலை திடீரென குண்டு வெடித்தது.



இதனால் அப்பகுதியில் பதட் டமும் பரபரப்பும் ஏற்பட்டது. இராணுவ வீரர்கள் குவிக்கப்பட் டனர்.

இந்நிலையில் ஆஸ்பத்தி ரிக்குள் பதுங்கியிருந்த தீவிர வாதிகள் இராணுவத்தினரை நோக்கி சரமாரியாகச் சுட்டனர். பதிலுக்கு இராணுவத்தினரும் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் மூவர் உயிரி ழந்துள்ளதுடன் பலர் படுகாயம டைந்துள்ளனர் என முதற்கட்ட தகவல்கள் வெளியாகியிருந்தன.

## சர்ச்சை...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

என்று சபாநாயகர் கருஜயசூரிய வெளியிட்ட தீர்ப்பை அடுத்து சபையில் நேற்று இடம்பெற்ற சர்ச்சையானது, பிற்பகல் 4 மணியளவிலேயே தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட எதிரணியினரின் வெளிநடப்பை அடுத்து வழமைக்குத் திரும்பியது.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்டபோதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அதாவது, இச்சம்பவத்துக்கு நாம் கவலையை தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால், இதிலிருந்து விமல் விவகாரம் தொடர்பில் ஒரு தெளிவான நிலைப்பாட்டுக்கு வந்துள்ளோம். அவர் தன்னை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்க வேண்டும் என்று தான் கோரியிருந்தார்.

ஆனால், இப்போது இடம்பெற்ற சம்பவத்தைப் பார்க்கும்போது அவருக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும் குரல் கொடுத்து, விமல் எம்.பி. தம்முடைய கூட்டணியைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டிக்கொடுத்து விட்டார்கள். எனவே, இவரை சுயாதீனமாக செயற்பட இடமளிக்கக் கூடாது என்று சற்று கிண்டல் தொனியில் கருத்துக் கூறினார்.

## தேசிய சுதந்திர...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

சுதந்திர முன்னணியை சுயாதீனமாக செயற்பட இடமளிக்க முடியாது என்று சபாநாயகர் கருஜயசூரிய நேற்று சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது விசேட அறிவிப்பொன்றை விடுத்து உரையாற்றிய சபாநாயகர்,

பாராளுமன்றில் தனது தலைமையிலான கட்சியை சுயாதீனமாக செயற்படுவதற்கு இடமளிக்குமாறு விமல் வீரவன்ஸ எம்மிடம் கோரியிருந்தார். ஆனால், 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி., ஈழ மக்கள் விடுதலை முன்னணி ஆகிய 6 கட்சிகள் மட்டுமே பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்பட முடியும் என்று தேர்தல்கள் ஆணையகத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, பாராளுமன்றில் இவ்வாறு சில கட்சிகளுக்கு சுயாதீனமாக செயற்பட அனுமதி வழங்கப்பட்டு அவை பிழையான முன்னுதாரணமாக இருந்த வரலாறும் உள்ளது. இவையனைத்தையும் கவணத்தில் கொண்டும், அரசமைப்பின் பிரகாரமும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அமைவாகவும் தேசிய சுதந்திர முன்னணியை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்க முடியாது என்றுத் தெரிவித்தார்.

## காத்தான்குடி...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண தளபதியுமான கருணா அம்மான் தெரிவித்துள்ளார். சிங்கள தொலைகாட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியின்போதே இவ்வாறு கூறினார்.அவர் மேலும் கூறுகையில்;

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைச் சம்பவத்தை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. நான் இதை எதிர்க்கின்றேன்.இதைச் செய்தவர் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் நியூட்டனாகும்.இந்த சம்பவம் தொடர்பில் நான் இப்போதுதான் வருத்தப்படுகிறேன்.

அப்போது என்னால் இதற்கு எதிராகக் குரல் எழுப்ப முடியவில்லை.புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியே வந்த பிறகுதான் எம்மால் இதைப் பேச முடிகிறது.ஆனால்,இவ்வாறான வேலைகளை செய்ய வேண்டாம் என்று நாங்கள் அப்போது பிரபாகரனிடம் கூறினோம். அரந்தலாவை பௌத்த பிக்குகள் படுகொலையையும் நிகழ்த்தியவர்கள் புலிகள் தான் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.பிரபாகரனுடன் எனக்கு முரண்பாடு ஏற்படுவதற்கு இந்தப் பிரச்சினைகள்தான் காரணமாக இருந்தன.சிவிலியன்கள் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை.

அன்டன் பாலசிங்கம்,கடற்படை தளபதி சூசை மற்றும் தமிழ் செல்வன் ஆகியோரும் சிவிலியன்களும் ஏனைய இன மக்களும் கொல்லப்படுவதை விரும்பவில்லை.அரநாயக்க சம்பவத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அப்போது குமரப்பன்தான் அந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருந்தார்.இது எனக்கும் தெரியாது;பிரபாகரனுக்கும் தெரியாது.இந்தச் சம்பவத்துடன் ஈடுபட்ட புலிகளுக்கு பிரபாகரன் தண்டனையும் வழங்கினார்.இதற்காக பொட்டு அம்மன் மற்றும் நியூட்டன் போன்றவர்களை அழைத்து பிரபாகரன் தண்டனை வழங்கினார்.ஆறு மாதமளவில் அவர்கள் தண்டனை அனுபவித்தனர்.அரந்தலாவை சம்பவமானது திட்டமிட்டு செய்யப்பட்டது அல்ல.வேறு ஒரு தாக்குதலுக்குச் செல்லும்போதுதான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.இவ்வாறான விடயங்களுடன் நான் உடன்படவில்லை.
சிவிலியன்களை கொல்லுமாறு பிரபாகரன் எங்களுக்கு கூறவில்லை.இராணுவத்துடன் சண்டை போடுவது பற்றியே அறிவுறுத்தப்பட்டோம்.ஆனால்,சில தளபதிகள் சிவிலியன்களை கொலை செய்வதை விரும்பினர். - என்றார்.

# அர்ஜூன் மகேந்திரனுக்கு அழைப்பாணை

(பீ.எப்.எம். றிஷாட்)

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பிணை, முறிகள் விற்பனை மோசடி தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடிகள் தொடர்பாக சாட்சியம் பெற்றுக்கொள்வதற்காகவே மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் நாளைய தினம் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ஆணைக்குழுவின் செயலாளர் 'மதிபால உடுகமசூரிய தெரிவித்தார்.

பிணைமுறை மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க, அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சியங்கள் மீதான விசாரணை,கடந்த 21ஆம் திகதி ஆரம்பமாகியது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான கே.டீ.சித்ர சிறி, பிரசன்ன ஜயவர்தன மற்றும் முன்னாள் சட்டமா அதிபர் வேலாயுதம் பிள்ளை உள்ளிட்டோர் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவே, இந்தச் சாட்சி விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி முதலாவதாக சாட்சியமளித்திருந்ததுடன், அவரிடம் தொடர்ந்து 2 நாட்கள் இவ்விசாரணைகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.இதனையடுத்து அரச அச்சகக்கூட்டுத்தாபனத்தின் அச்சகரிடம் கடந்த 27ஆம் திகதி விசாரணைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மத்திய வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் பிணை முறி மோசடி தொடர்பிலான கோப் குழுவின் அறிக்கைக்கான விசாரணையை ஆரம்பிக்குமாறு சட்ட மா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார். இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு தான் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.கோப் குழுவின் விசாரணை அறிக்கையானது பாராளுமன்றின் அனுதியுடன் சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இதன்படி சட்ட மா அதிபரால் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

## ஐ.தே.க...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் தியாகங்களைச் செய்தவர்கள் தொழில்வாய்ப்பு உட்பட சகல விடயங்களிலும் புறக்கணிக்கப்படுவதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் அஜித் பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜயமான்ன உட்பட பலரும் சுட்டிக்காட்டினர்.

இன்று மாகாண சபைகள் மூலமும் அமைச்சுக்கள் மூலமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்கே தொழில்கள் வழங்கப்படுகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் பலரும் இரு தோணிகளில் கால் வைத்த வண்ணமே இருக்கிறார்கள். எப்போதும் மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் தாவுவதற்குத் தயாரான நிலையிலே இருக்கிறார்கள் என்றும் ஐ.தே.க. பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நீண்ட நேரமாக உறுப்பினர்கள் பலரும் தம் ஆதரவாளர்கள் தள்ளப்பட்டுள்ள நிலை குறித்து மனக்குமுறல்களை வெளியிட்டனர். அமைச்சர்கள் பலரது பெயரையும் குறிப்பிட்டு குற்றச்சாட்டுகளையும் முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சி ஆதரவாளர்களது விரக்தி நிலையைப் போக்குவதற்கு கட்சி பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. கட்சி தலைமையகத்துக்கு வருவோரது தேவைகளைக் கவனிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் லகி ஜயவர்தன கட்சியின் முன்னாள் செயலாளர் ஒருவரும் சிறிகொதாவில் வாரத்தில் இரு நாட்கள் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு வருட காலமாக எதிர்நோக்கியிருந்த பொருளாதார நெருக்கடி நிலை நீங்கி வருகின்றது. கட்சி செயற்பாட்டாளர்களை கவனிப்பதற்கான விசேட திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என கட்சி தலைமையகத்தினைப் புனரமைப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கை பற்றி அமைச்சர் கபீர் ஹாசிமும், பிரதி அமைச்சர் கிரான் விக்கிரமரத்னவும் விளக்கினர்.

## தகவல்...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் முன்னர் இருந்த தகவல்களை மறைத்து பாதுகாக்கும் நிலையிலிருந்து அரச அதிகாரிகள் மீண்டு வருவதற்கு மேலதிக பயிற்சியும், காலம் தேவைப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

தகவல் ஆணையகம் நிதி நெருக்கடியொன்றிற்கும் முகங்கொடுத்திருந்தது. 760 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்தது. நிதியமைச்சு மற்றும் அமைச்சரவை அனுமதியைத் தொடர்ந்து பிரச்சினைகள் சுமுகமாகும். எமது அலுவலகத்தில் குறைந்தளவு அதிகாரிகளே பணியில் இருக்கின்றனர். மேலும் 10 அதிகாரிகள் அளவில் தேவைப்படுகின்றனர்.

பொதுமக்கள் தகவல் அறியும் உரிமையை பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுவரையில் அரச அலுவலகங்களுக்கு 1800 தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பஷிலுக்கு...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

GI குழாய் வழங்குவதாக 36 மில்லியன் அரச நிதிகளை மோசடி செய்ததாக பசில் மற்றும் கித்சிறிக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே அவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் இன்றைய தினம் உத்தரவிட்டுள்ளது.

இருவரையும் தலா 2 மில்லியன் ரொக்கப் பிணையிலும், தலா 10 மில்லியன் பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலும் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இந்த வழக்கு தொடர்பில் பிணையில் விடுதலை செய்யப்பட்ட இருவரையும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நிதி மோசடி விசாரணை பிரிவில் முன்னிலையாகுமாறு நீதிவான் உத்தரவிட்டுள் ளார்.

## கிழக்கில்...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் தலைமையில் எதிர்வரும் 14ஆம் திகதி திறைசேரியில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமத் கடந்த 28ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து, வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் பொருட்டு கிழக்கு மாகாண அரச சேவையில் நிலவி வருகின்ற வெற்றிடங்களை நிரப்பலாம் என தெரிவித்து, அதற்கான ஆலோசனைகளை முன்மொழிந்திருந்தார்.

இதன்போது கிழக்கில் உள்ள பாடசாலைகளில் 4703 ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக பிரதமரிடம் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இது தொடர்பில் ஒருவார காலத்திற்குள் சாதகமான முடிவை அறிவிப்பதாக பிரதமர் உறுதியளித்திருந்தார்.

இதன் பிரகாரமே தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடலை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் பணித்திருப்பதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண முதலமைச்சர், மாகாண கல்வியமைச்சர், மத்திய கல்வி அமைச்சின் செயலாளர், திறைசேரியின் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளை பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## பாராளுமன்றில்...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமர்வுகளில் கலந்து கொள்வது தடைவிதிக்கப்பட்டது.

25 வருடங்களுக்குப் பின் நேற்று பாராளுமன்றத்துக்குள் பொலிஸார் அழைக்கப்பட்டது பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியது.

பாராளுமன்றத்தில் கட்சித்தலைவர் ஒருவர் வெளியேற்றப்பட்ட முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.

தினேஷ் குணவர்தனவுக்கு ஒரு வார காலத் தடை விதிக்கும் பிரேரணைக்கு ஆதரவாக 85 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 114 பேர் வாக்களிப்பின் போது சபையில் இருக்கவில்லை. இச்சர்ச்சை காரணமாக பாராளுமன்றின் வழமையான செயற்பாடுகள் சுமார் 3 மணித்தியாலங்கள் கடந்து ஆரம்பமாகியதுடன், சுமார் 25 வருடங்களுக்குப் பின்னர் சபைக்குள் பொலிஸாரும் வருகை தந்து பரபரப்பை ஏற்படுத்தினர்.

பாராளுமன்றமானது நேற்று பிற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது சிறப்பு அறிவிப்பொன்றை விடுத்து உரையாற்றிய சபாநாயகர், விமல்வீரவன்ஸ தலைமையிலான கட்சியை சுயாதீனமாக செயற்படுவதற்கு இடமளிக்க முடியாது என்று கூறினார்;.

இதன்போது இதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட விமல் வீரவன்ஸ, என்ன. எமது வாயை மூடவா முயல்கின்றீர்கள்? பாராளுமன்றில் ஏகாதிபத்திய வழிநடத்தல் இடம்பெறுகின்றது. இதுதொடர்பில் நான் இங்கு கருத்து வெளியிட வேண்டும் என்று தெரிவிக்க, தற்போது பாராளுமன்றில் முக்கியமான பிரேரணை எடுத்துக்கொள்ளப்படவுள்ளமையால் உங்களின் கருத்துக்களை வெளியிட இப்போது எம்மால் நேரம் ஒதுக்க முடியாது. வேண்டுமெனில், நீங்கள் எழுத்து மூலமாக எமக்கு உங்களின் ஆட்சேபனையை அனுப்பினால் நாம் அதுதொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என்று சபாநாயகர் அவருக்கு பதிலளித்தார்.

எனினும் விமல் எம்.பி., தொடர்ந்தும் உரத்தக் குரலில் சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தமையால், இவர் தொலைக்காட்சி விளம்பரத்துக்காகவே இவ்வாறு செயற்படுகிறார் என்று சபைமுதல்வாரன லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பின்னர், ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய விமல் எம்.பி, நான் இங்கு சபாநாயகரின் கருத்துக்கு எதிர்ப்பினை வெளியிடவில்லை. மாறாக எனக்கு இதுதொடர்பில் கருத்து வெளியிட நேரம் ஒதுக்குமாறு மட்டுமே கேட்கிறேன். இதற்கு முறையான பதிலொன்றை நீங்கள் (சபாநாயகர்) வழங்க வேண்டும் என்றுக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த ஒருங்கிணைந்த எதிரணித் தலைவரான தினேஷ் குணவர்த்தன எம்.பி., ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர் எனும் வகையில், சபாநாயகர் கூறிய கருத்துக்கள் (விமலின் கட்சியை சுயாதீனமாக ஏற்க முடியாது என்று வரலாறுகளை உதாரணம் காட்டி சபாநாயகர் ஆரம்பத்தில் தெரிவித்த கருத்துக்கள்) பொய்யானவை என கூறிக்கொள்கிறேன். விமல் எம்;.பி. இதுவிடயம் தொடர்பில் இதற்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தாலும் இதுவரை இதற்கு ஒழுங்கான ஒரு பதில் வழங்கப்படவில்லை என்று காட்டமாகத் தெரிவித்தார்.

இதற்கு, அவரை (விமலை) சுயாதீன உறுப்பினராக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவரது கட்சியை சுயாதீனக் குழுவாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். இதனால் எதிரணி உறுப்பினர்கள் சபையில் பெரும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். சபாநாயகர் அவர்களை அமைதியாக இருந்து சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பலமுறை கேட்டுக்கொண்டும் அவர்கள் தொடர்ச்சியாக கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர்.

பிறகு இந்த கூச்சல் குழப்பங்கள் சற்று அமைதியாக, நான் வரலாற்றை திரிபுபடுத்தி கருத்துக்களைக் கூறவில்லை. பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமையவே நான் இந்தத் தீர்ப்பினை வெளியிட்டேன் என்று தினேஷ் எம்.பி. வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு சபாநாயகர் கருஜயசூரிய மறுப்புத் தெரிவித்தார்.

ஆனால், கூட்டணியிலிருந்து இதற்கு முன்னர் கட்சிகள் பிரிந்து சென்றுள்ளன. அதற்கெல்லாம் அனுமதி கிடைத்துள்ளது. ஏன்ம.ஜே.வி.பி.கூட கூட்டணியிலிருந்து பிரிந்து சென்ற ஒரு கட்சித் தான் என்று தான் சார்ந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாமல் விமல் வீரவன்ஸ தொடர்ச்சியாக எழுந்து நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். இதனால், சபையில் மீண்டும்; கூச்சல் ஏற்பட்டமையால், பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவத்துடன் நடந்துக் கொள்ள வேண்டும் என்று சபாநாயகர் அவர்களுக்கு அறிவித்தார். இதனையும் கவனத்தில் எடுக்காத விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வல்ல உள்ளிட்ட எதிரணியின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் உரத்த குரலில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தமையால், மிகவும் வெட்கமாக உள்ளது.தயவு செய்து அனைவரும் அமருங்கள். உறுப்பினர்கள் இவ்வாறு நடந்து கொள்வது முறையல்ல. தினேஷ் எம்.பி. அவர்களே நீங்கள் ஒரு சிரேஷ்ட உறுப்பினர். நீங்கள் இவ்வாறு கூச்சலிடுவது ஏனையோருக்கு பிழையான முன்னுதாரணமாகிவிடும் என்று சபாநாயகர் அவர்களுக்கு பலமுறை அறிவித்தும் சபையில் கூச்சல் குழப்பம் ஓயவில்லை.

இவ்வாறு சபையில் சர்ச்சை தொடர்ந்துக் கொண்டிருந்தபோதே, விமல் எம்;.பி., ஆசனத்திலிருந்து எழுந்து சபாநாயகரை நோக்கி, வெட்கமாக உள்ளதும்.வெட்கமாக உள்ளதும். என்று கூறி நடந்து வந்தார். இவரைத் தொடர்ந்து தினேஷ் எம்.பியும் எழுந்து முன்வந்தமையால், நீங்கள் எனக்கு இடையூறு விளைவிக்கின்றீர்கள். எமது பணியை மேற்கொள்ள இடமளியுங்கள். வரலாறு குறித்து பேசும் நீங்கள் (தினேஷ்), நான் தகவல் அறியும் சட்டமூலத்தைக் கொண்டுவந்தபோது எனக்கு பேசக் கூட இடமளிக்கவில்லை என்று சபாநாயகர் சற்று கோபமாக அவர்களைப் பார்த்துத் தெரிவித்தார்.

எதிரணி உறுப்பினர்கள் இவ்வாறு சபை நடுவே வந்தமையால் ஆளும் தரப்பினரும் அவர்களுக்கு எதிராக கடுமையாக கூச்சலிட்டனர். இதனால், சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்து சபாநாயகர் அக்கிராசனத்திலிருந்து எழுந்துச் சென்றார்.

இதன்போதும், எதிரணி உறுப்பினர்கள் தத்தமது ஆசனங்களில் அமராது கூட்டமாக கதைத்துக் கொண்டே இருந்தனர். பின்னர் 1.55 மணியளவில் சபையை மீண்டும் கூட்டிய சபாநாயகர், நான் நிலையியற் கட்டளைகளின் படித் தான் செயற்படுகிறேன். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருக்கவும் என்று தெரிவித்தார்.

இதற்கு, நாம் எமக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று தான் கேட்கிறோம் என்று விமல் எம்.பி., சபாநாயகரைப் பார்த்துக் கூறிக்கொண்டிருக்கும்போதே ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி அமைச்சர் சரத்பொன்சேகா, நான் கைது செய்யப்பட்டபோது பாராளுமன்ற குழு விவாதங்களில் கலந்து கொள்ளவே எனக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இந்நிலையில், விமலுக்கு மட்டும் எப்படி அனுமதி வழங்க முடியும் என கேட்டமைக்கு, நீதிமன்றின் அனுமதியுடனேயே அவர் கலந்து கொண்டுள்ளார். இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சபாநாயகர் அவருக்கு பதிலளித்தார். இதன்போதும் தினேஷ், விமலினால் சபையில் கூச்சல்கள் எழுப்பப்பட்டுக் கொண்டேதான் இருந்தன.

இதன்போது, கூச்சலிடுபவர்களை வெளியேற்றினால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்று ஆளும் தரப்பு உறுப்பினரான ஹெக்டர் அப்புஹாமி சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து, உறுப்பினர்களே. நீங்கள் இவ்வாறு தொடர்ச்சியாக சபை நடவடிக்கைகளை முன்னெடுக்கவிடாமல் குழப்பிக் கொண்டிருந்தால் நான் நிலையியற் கட்டளை 74 இன் கீழ் 1 இற்கு இணங்க உங்களை வெளியேற்ற வேண்டியேற்படும். தயவு செய்து இவ்விடயத்தைக் கேலியாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சபாநாயகர் கருஜயசூரியவினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதும் தினேஷ் எம்.பி. உள்ளிட்டோர் இடையூறு விளைவித்துக் கொண்டே இருந்தனர்.

இதன் காரணமாக சபை நடவடிக்கைகள் மீண்டும் 2.10 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் 2.30 மணிக்கு மீண்டும் சபைக் கூடியபோது சபாநாயகரின் அறிவிப்பையும் மீறி எதிரணி உறுப்பினர்கள் எழுந்து நின்று மீண்டும் மீண்டும் கூச்சலிட்டுக் குழப்பியமையால், தினேஷ் குணவர்த்தன 74இன் கீழ் 1 இற்கு இணங்க சபையிலிருந்து வெளியேற வேண்டும் என்று சபாநாயகர் உத்தரவிட்டார்.

இதன்போது, நாம் கொலைக்காரர்கள் அல்ல. அவர் (தினேஷ்) உறுப்பினர்களின் உரிமைக்காகவே குரல் கொடுக்கிறார் என்று பந்துல குணவர்த்தன எம்;.பி., சபாநாயகரிடம் தெரிவித்தார். பின்னர் தினேஷ் எம்.பியும் எழுந்து நின்று, பிரச்சினையொன்று ஏற்பட்டால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவது தானே வழமை. ஏன், இவ்விடயத்தில் இன்று (நேற்று) இதனை நீங்கள் அவ்வாறு எவ்வித கலந்துரையாடலும் மேற்கொள்ளவில்லை என்று சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு, இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் நாம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடிவிட்டோம். இதற்கு மேல் கலந்துரையாட ஒன்றுமில்லை என்பதால் தான் நாம் விமலின் கோரிக்கை தொடர்பில் இவ்வாறானதொருத் தீர்ப்பினை வெளியிட்டோம் என சபாநாயகர் தினேஷுக்கு பதில் வழங்க, மீண்டும் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

இதனால், தினேஷ் எம்.பியை சபையிலிருந்து வெளியேற்றுமாறு படைக்கலச் சேவிதரிடம் உத்திரவிட்டு, சபாநாயகர் 2.40 மணியளவில் மீண்டும் மூன்றாவது முறையாக சபையை ஒத்திவைத்துவிட்டு தனது ஆசனத்திலிருந்து வெளியேறினார்.

ஆனால், எக்காரணம் கொண்டும் சபையிலிருந்து வெளியேற மாட்டேன் என தினேஷ் எம்.பிக் கூற, எதிரணி உறுப்பினர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டு வெளியேறவிடாமல் தடுக்கும் பாணியில் படைக்கலச் சேவிதருடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர்.

இந்த சர்ச்சை நீண்ட நேரம் தொடர்ந்தமையால் தினேஷ் எம்.பியை வெளியேற்றும் நோக்கில், படைக்கலச் சேவிதரின் அழைப்பின் பேரில்; 21 பொலிஸார் சபைக்குள் சுமார் 25 வருடங்களுக்குப் பின்னர் நுழைந்து அவரைச் சூழ்ந்து கொண்டனர். எனினும், எதிரணி உறுப்பினர்கள் அதற்கு இடமளிக்காமல் தொடர்ந்தும் தினேஷை சூழ இருந்துக் கொண்டிருந்த காரணத்தினால், சுமார் 15 நிமிடங்கள்வரை காத்திருந்து 3.10 மணியளவில் பொலிஸாரும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது சபையிலிருந்து வெளியில் சென்றனர்.

இவ்வாறு தொடர்ந்தும் சர்ச்சை ஏற்பட்டுக்கொண்டிருக்க 3.15 மணிக்கு மீண்டும் சபாநாயகரினால் சபை கூடியது. இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், நான் தினேஷ் எம்.பி. மீது மிகுந்த மரியாதை கொண்டவன். எனினும், சபாநாயரின் உத்தரவை ஏற்று அவர் வெளியேறிச் செல்லாதமையானது முழுப் பாராளுமன்றையும் அவமதிக்கும் ஒரு செயற்பாடாகும் என்றுக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து சபைமுதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, சபை நடவடிக்கைகளுக்கு குழப்பம் விளைவித்தமைக்காக தினேஷ் எம்;.பி. ஒரு வாராத்துக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள முடியாது எனக் கூற பெரும்பான்மையான உறுப்பினர்கள் அதனை ஆமோதித்தனர்.

# Sports



# இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு 2016இல் 400 மில்லியன் வருமானம்




# இரட்டைச் சதத்தை தவறவிட்ட மெண்டிஸ்

## தமீம் - சர்கார் இலங்கைக்கு பதிலடி

பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. நேற்றைய ஆட்டநேர முடிவில் தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. முன்னதாக முதல் நாள் ஆட்டத்தில் 321 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில், நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி மதிய நேர இடைவெளியின் பின்னர் 494 ஓட்டங்களை பெற்று சகல விக்கட்டுகளையும் இழந்தது. இலங்கை அணி சார்பில் குசால் மெண்டிஸ் இரண்டாவது டெஸ்ட் சதத்தை பூர்த்திசெய்தத நிலையில், துரதிஷ்டவசமாக 194 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து தனது முதலாவது இரட்டைச் சதத்தை 6 ஓட்டங்களால் தவறவிட்டார். இவர் 4 ஆறு ஓட்டங்கள் மற்றும் 19 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 194 ஓட்டங்களைப் பெற்று டெஸ்ட் அரங்கில் தனது அதிகபட்ச ஓட்டத்தையும் பதிவு செய்தார்.

இதேவேளை இலங்கை அணி சார்பில் இளம் வயதில் 1000 ஓட்டங்களை கடந்த சாதனையையும் இவர் நிலைநாட்டியுள்ளார்.

இவர் 22 வருடம் 33 நாட்களில் தனது 1000 ஓட்டத்தை கடந்துள்ளார். இதற்கு முன்னர் அர்ஜுன ரணதுங்க 22 வருடம் 105 நாட்களில் 1000 ஓட்டங்களை கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், இளம் வயதில் 190 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்த 2ஆவது வீரராகவும் வராற்றில் இடம்பெற்றார். இந்நிலையில், குசலுடன் சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தி நிரோஷன் திக்வெல்ல, தனது முதலாவது டெஸ்ட் சதத்தையும் தவறவிட்டார்.

மறுமுனையில் அசேல குணரத்ன 85 ஓட்டங்களையும், நிரோஷன் திக்வெல்ல 75 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க, இறுதியாக டில்ருவன் பெரேரா 51 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியை வலுவான நிலைக்கு கொண்டு சென்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் மெஹன்தி ஹசன் மீராஸ் 113 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டினை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமீம் இக்பால் மற்றும் சௌம்ய சர்கார் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தனர். இதில் 94 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று இவ்விருவரும் முதல் விக்கெட்டுக்காக புதிய சாதனை படைத்தனர். இந்நிலையில் 57 ஓட்டங்களைப் பெற்ற தமீம் இக்பால், லக்ஷான் சந்தகெனின் பந்துவீச்சில் ரன்அவுட் ஆக, அதன்பிறகு களமிறங்கிய மூமினுல் ஹக் 7 ஓட்டங்களைப் பெற்றநிலையில் தில்ருவன் பெரேராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். எனினும், நேற்றைய நாள் நிறைவடையும் போது சிறப்பாக துடுப்பெடுத்தாடிய சௌம்ய சர்கார் 66 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் ஒரு ஓட்டத்துடனும் ஆடுகளத்தில் இருந்தனர். இன்று போட்டியின் 3ஆவது நாளாகும்.

பி.எப்.எம் றிஷாட்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று அறிக்கை நேற்றையதினம் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிடம் கையளிக்கப்பட்டது. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபாலவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவின் வேண்டுகோளுக்கிணங்க இந்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து விளையாட்டு சங்கங்களும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது நிதிக் கூற்று அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் பல விளையாட்டு சங்கங்கள் இதற்கான காலஅவகாசத்தை மேலும் அதிகரிக்கும்படி கேட்டுக்கொள்ள, இதன் இறுதித் திகதி மே மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்க விளையாட்டுத்துறை அமைச் தீர்மானித்தது. இந்நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் மூலம் தெரிவாகிய திலங்க சுமதிபால தலைமையிலான இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகத்தினர், கடந்த வருடத்துக்கான நிதிக்கூற்று அறிக்கையினை நேற்றையதினம் அமைச்சரிடயம் கையளித்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் தலைவர் திலங்க சுமதிபால கருத்து வெளியிடுகையில், இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று ஒரு வருடகாலத்தினுள் நிதி முகாமைத்துவம் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டமை சந்தோஷமளிக்கிறது. இதன்படி இலங்கை கிரிக்கெட் நிறுவனம் கடந்த 2016இல் 400 மில்லின் ரூபா வருமானத்தை ஈட்டி, ஒரு பில்லியன் ரூபா மேலதிக வருமானத்தையும் ஈட்டியுள்ளது. இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாகத்தை நான் பொறுப்பேற்றபோது இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மிகப் பெரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தது. குறிப்பாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 300 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதிப்பற்றாக்குறையை எதிர்நோக்கியிருந்தது. மேலும், கடந்த வருடத்தில் நாம் தேவையில்லாத செலவுகளையெல்லாம் நிறுத்திவிட்டு, கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காக மாத்திரம் பணத்தை செலவழித்தோம். இதன்பிரதிலனாக கடந்தவருடத்தில் நாம் அதிகளவு வருமானத்தைப் பெற்றுக்கொண்டோம் என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு விளையாட்டுத்துறை அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், நான் விளையாட்டுத்துறை அமைச்சராக அரசியல் ரீதியில் நான் இதுவரை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் எந்தவொரு விடயத்திலும் தலையிடவில்லை என்றார்.

# இலங்கை ஏ அணியின் தலைவரானார் அஷான்



இலங்கை ஏ அணி மற்றும் இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கிடையில் தற்போது நடைபெற்றுவருகின்ற 5 ஒருநாள் போட்டிகளில் முதல் 3 போட்டிகள் தற்போது நடைபெற்று முடிந்துள்ள நிலையில் இலங்கை ஏ அணியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இந்த நிலையில் புதிய வீரர்களுக்கு இந்த போட்டியில் பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கை ஏ அணிக்கு தலைவராக வலது கை துடுப்பாட்ட வீரரும், அனுபவமிக்க வீரருமான அஷான் பிரியஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார். நடைபெற்றுமுடிந்த 3 போட்டிகளிலும் தலைவராகச் செயற்பட்ட மிலிந்த சிறவர்தன, துடுப்பாட்டத்தில் மீண்டும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்த குசல் ஜனித் பெரேரா மற்றும் கடைசிப் போட்டியில் சகலதுறைகளிலும் அசத்தி இலங்கை அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்த ஷெஹான் ஜயசூரிய ஆகிய வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டு, எஞ்சலோ பெரேரா, துஷ்மன்த சமீர, சதுரங்க டி சில்வா மற்றும் ரமித் ரம்புக்வெல்ல ஆகியோர் கடைசி 2 ஒருநாள் போட்டிகளுக்கான குழாமில் இடம் பெற்றுள்ளனர்.

குறித்த போட்டியில் இலங்கை அணி முதல் 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று 3-0 என்ற அடிப்படையில் போட்டியை தனதாக்கியுள்ளது.

அத்துடன் 4ஆவது ஒருநாள் போட்டி இன்றைய தினமும், 5ஆவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் 11ஆம் திகதியும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேசப் போட்டிகள்




பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் இறுதிப்போட்டி, கடந்த 5ஆம் திகதி லாகூரில் வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, வெளிநாட்டு வீரர்களைக் கொண்ட அணியொன்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகளைக் கொண்ட டி20 போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இப்போட்டித் தொடரை ஏற்பாடு செய்வதில் இங்கிலாந்து கிரிக்கெட் சபை பூரண ஒத்துழைப்பை வழங்குகின்ற அதேநேரம், அந்நாட்டு கிரிக்கெட் சபையின் தலைவரும், சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பாகிஸ்தானுக்கான பாதுகாப்பு தொடர்பில் நியமிக்கப்பட்ட செயலணியின் தலைவருமான கைல்ஸ் கிளார்க், இதுதொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் கிளார்க், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷகாரியர் கானுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தீவிரவாதத்தால் கிரிக்கெட்டை வெல்ல முடியாது எனவும், பாகிஸ்தானின் கிரிக்கெட்டுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இவ்வருடத்துக்குள் உலக பதினொருவர் அணியொன்றை பாகிஸ்தானில் விளையாட அனுப்பிவைக்க ஐ.சி.சியுடன் பேச்'வார்த்தை நடத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் உலக கிரிக்கெட் அரங்கில் பாகிஸ்தான் கிரிக்கெட்டினை வெல்லவைக்க அனைத்து பங்களிப்பினையும் வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிராக தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, பாகிஸ்தானில் சென்று எந்தவொரு சர்வதேச கிரிக்கெட் அணிகளும் விளையாடவில்லை. இதன்காரணமாக பாகிஸ்தான் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தது.

# முதலிடத்தில் அஸ்வின் - ஜடேஜா

டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில், இந்தியாவின் சுழற்பந்து வீச்சார்களான அஸ்வின் மற்றும் ரவிந்திர ஜடேஜா ஆகிய இருவரும் முதலிடத்தை பகிர்ந்துள்ளனர். நடைபெற்று முடிந்த அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரு டெஸ்ட் போட்டிகளிலும் விக்கெட்டுகளை வாரி குவித்த இருவரும் 892 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளனர். சுழற்பந்து வீச்சாளர்கள் இருவர் முதலிடம் வகிப்பது இதுவே முதல்முறை. அத்தோடு, ஜடேஜா முதல்முறையாக தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளார். இந்நிலையில் முதல் டெஸ்ட் போட்டியில், அஸ்வின் இரு இன்னிங்ஸிலும் 7 விக்கெட்டுகளையும், ஜடேஜா இரு இன்னிங்ஸிலும் 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். மேலும் பெங்களூரில் நடைபெற்ற 2ஆது டெஸ்ட் போட்டியில், இரு இன்னிங்ஸிலும் இருவரும் தலா 8 விக்கெட்டுகளை வீழ்த்தினர். டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில், இலங்கை அணியின் ரங்கன ஹேரத் நான்காவது இடத்தில் உள்ளார்.





மாத்தளை சாஹிராக் கல்லூரியின் 49ஆவது இல்ல விளையாட்டுப் போட்டிகள், பாடசாலை மைதானத்தில் அதிபர் ஜே. எம். இக்பால் தலைமையில் இடம்பெற்றது. இதில் முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக விவசாய இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிஹார, மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ. எச். எம் இப்றாஹீம் கலந்து கொண்டபோது விளையாட்டு வீரர்களுக்கு கிண்ணங்களை பரிசில் வழங்குவதைப் படங்களில் இங்கு காணலாம்.

(இக்பால் அலி)

# மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் முதல் போட்டியில் இலங்கை

ICC WOMEN'S WORLD CUP ENGLAND & WALES 2017

உலக கிரிக்கெட் அரங்கில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டுள்ள மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் ஜுன் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இம்முறை போட்டிகளுக்கான போட்டி அட்டவணை நேற்று சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் வெளியிடப்பட்டது. இதன்படி, முதலாவது போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், இதில் பிரபல நியூசிலாந்து மகளிர் அணியை இலங்கையும், போட்டிகளை நடத்தும் இங்கிலாந்து மகளிர் அணி இந்தியாவையும் சந்திக்கவுள்ளது. இப்போட்டிகள் இங்கிலாந்தின் பிரிஸ்டல் மற்றும் டேர்பை ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய மகளிர் அணி, கடந்த வருடம் நடைபெற்ற டி20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய பிரபல மேற்கிந்திய தீவுகள் அணியை 26ஆம் திகதி டவுண்டனில் சந்திக்கவுள்ளதுடன், 25ஆம் திகதி தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டி லீசெஸ்டரில் நடைபெறவுள்ளது. இதேவேளை, இலங்கை மகளிர் அணி ஜுன் 29ஆம் திகதி அவுஸ்திரேலியாவுடனும், ஜுலை 2இல் இங்கிலாந்துடனும், 5இல் இந்தியாவுடனும், 9இல் மேற்கிந்திய தீவுகளுடனும், 12 மற்றும் 15ஆம் திகதிகளில் தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்முறை மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளில் ஒட்டுமொத்தமாக 28 ஆட்டங்கள் நடைபெறவுள்ளதுடன், முதல் நான்கு இடங்களைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் எதிர்வரும் ஜுலை மாதம் 18 மற்றும் 20ஆம் திகதி அரையிறுதிப் போட்டிகளில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இறுதிப்போட்டி ஜுலை 23இல் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இந்திய அணிக்கு ஒப்போ அனுசரணை

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக, 2014 முதல் இந்திய கிரிக்கெட் அணியின் அதிகாரப்பூர்வ சீருடை விளம்பரதாரராக இருந்து வந்த ஸ்டார் இந்தியா நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் இம்மாதத்துடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில் புதிய விளம்பதார்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்திய கிரிக்கெட் சபை கடந்தவாரம் விண்ணப்பம் கோரியிருந்தது. இருப்பினும், ஏலத்தில் ஒப்போ, விவா, பே டிஎம் உள்ளிட்ட 9 நிறுவனங்கள் பங்கேற்றன. இதற்கான குறைந்தபட்ச ஏலத்தொகை ரூ. 538 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. நேற்றுமுன்தினம் இதன் முடிவுகள் வெளியாகின. இதன் படி, அதிகபட்சமாக ரூ. 1,079 கோடிக்கு ஏலம் கேட்டிருந்த ஒப்போ கையடக்கத் தொலைபேசி நிறுவனம், இந்திய அணியின் புதிய அனுசரணையாளராக தெரிவானது.

இதன்படி, இந்தியாவின் பிரபல கையடக்கத் தொலைபேசி நிறுவனமான ஒப்போ நிறுவனம் எதிர்வரும் 5 வருடங்களுக்கு இந்திய அணியின் சீருடை விளம்பரதாராக ஒப்பந்தம் செய்துள்ளது.





அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற சர்வேதேச மாஸ்டர்ஸ் மெய் வல்லுனர் போட்டியில் கலந்துகொண்டு ஈட்டி ஏறிதலில் தங்கப்பதக்கமும், குண்டு போடுதலில் வெள்ளிப் பதக்கமும் பெற்ற நிந்தவூரைச் சேர்ந்தவரும், தேசிய நீர்வழங்கல்கள் வடிகாலமைப்பு சபையினை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றியவருமான யூ.எல். சியாட் மொஹம்மட் வீரரை, சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம் நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார். இதில் பிரதி அமைச்சர் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய வீரர்களை படங்களில் காணலாம்.

(படங்கள் : சுலைமான் றாபி)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 09TH MARCH 2017